# 10

அறிவாளி

# சமூக அறிவியல்

துணைவன்

## பத்தாம் வகுப்பு


## கௌசெல்ராமு பதிப்பகம் பி.லிட்.

**# 728, 7ஆவது பிளாக், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.**

**போன் : 044-26535245 ; அலைபேசி : 9176629095**

**மின்னஞ்சல் : kouselramu97@gmail .com**

**விலை : ₹ 140**

வெளியிடுவோர்
**பா. அமுதா செல்லமுத்து**
கௌசெல்ராமு பதிப்பகம் பி. லிட்.
# 728, 7ஆவது பிளாக், முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.
தொடர்புக்கு : 044-26535245 ; 9176629095.

© உரிமை பதிப்பகத்தாருக்கு

ஏழாவது பதிப்பு (திருத்தப்பட்ட பதிப்பு) : ஏப்ரல் 2026

# முன்னுரை

பெருமதிப்பிற்குரிய ஆசிரிய பெருமக்களுக்கும் மரியாதைக்குரிய மாணவ மாணவிகளுக்கும் வணக்கம்.

தங்களுடைய எதிர்பார்ப்புக்கு ஏற்ப பாடநூலின் பயிற்சிப் பகுதியிலுள்ள அனைத்து வினாக்களும் விடையளிக்கப்பட்டு அலகு வாரியாக இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக, தேர்வுகளுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காலக்கோடு வினாக்கள் மற்றும் வரைபட வினாக்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு விடையளிக்கப்பட்டுள்ளன.

அவ்வினாக்கள் முந்தைய வினாத்தாட்களில் இடம் பெற்றுள்ள விவரத்தை செப் 2020, செப் 2021, மே 2022, ஆக 2022, ஏப் 2023, ஜூன் 2023, மார்ச் 2024, ஜூலை 2024, ஏப் 2025, ஜூலை 2025 மற்றும் ஏப்ரல் 2026 எனக் குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

முந்தைய வினாத்தாட்களில் இடம் பெற்ற ஆனால் மேற்குறிப்பிட்ட பாடநூல் பகுதிகளில் இடம்பெறாத சில முக்கியமான வினாக்களும் விடையளிக்கப்பட்டு அந்தந்தப் பகுதிகளில் கூடுதல் வினாக்களாக சேர்க்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து பயன்படுத்தும் வகையில் இந்த புத்தகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தங்களுடைய பயன்பாட்டில் ஏதேனும் கடினத் தன்மையை உணர்ந்தால் அவற்றை எங்களுடன் பகிர்ந்து கொண்டு அவை எதிர்வரும் பதிப்புகளில் சரிசெய்யப்பட வாய்ப்புத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன் . . . அறிவாளி ஆசிரியர் குழு.

## பொருளடக்கம்


அலகு பாடப்பகுதி பக்கம்

### வரலாறு

1 முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும் ............ 1

2 இரு உலகப்போர்களுக்கு இடையில் உலகம் ................................ 7

3 இரண்டாம் உலகப்போர் .................................................................. 11

4 இரண்டாம் உலகப்போருக்குப் பிந்தைய உலகம் ............................ 15

5 19ஆம் நூற்றாண்டில் சமூக, சமய சீர்திருத்த இயக்கங்கள் .............. 19

6 ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் ........................................................................ 25

7 காலனியத்துக்கு எதிரான இயக்கங்களும் தேசியத்தின் தோற்றமும். 30

8 தேசியம்: காந்திய காலக்கட்டம் ..................................................... 34

9 தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் .......................................... 40

10 தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள் ...................................................... 44

### புவியியல்

1 இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு ....... 49

2 இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் ..................... 55

3 இந்தியா - வேளாண்மை ................................................................. 61

4 இந்தியா - வளங்கள் மற்றும் தொழிலகங்கள் ................................... 69

5 இந்தியா - மக்கள் தொகை, போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் வணிகம் ........................................................................ 74

6 தமிழ்நாடு - இயற்கைப் பிரிவுகள் ..................................................... 80

7 தமிழ்நாடு - மானுடப் புவியியல் ....................................................... 85

## குடிமையியல்


1 இந்திய அரசியலமைப்பு ........ 91
2 நடுவண் அரசு ........ 96
3 மாநில அரசு ........ 101
4 இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை ........ 105
5 இந்தியாவின் சர்வதேச உறவுகள் ........ 109


## பொருளியல்


1 மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம் ........ 115
2 உலகமயமாதல் மற்றும் வர்த்தகம் ........ 121
3 உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து ........ 125
4 அரசாங்கமும் வரிகளும் ........ 129
5 தமிழ்நாட்டில் தொழில்துறை தொகுப்புகள் ........ 134


## காலக்கோடு மற்றும் வரைபடங்கள்


வினா எண்:41 - வரலாறு - காலக்கோடு வினா-விடை (5 மதிப்பெண்கள்) ........ 139

வினா எண்:42 - வரலாறு - வரைபட வினா-விடை (இந்தியா மற்றும் உலகம்) (5 மதிப்பெண்கள்) ........ 142

வினா எண்:44(அ) - புவியியல் - வரைபட வினா-விடை (இந்தியா) (8 மதிப்பெண்கள்) ........ 147

வினா எண்:44(ஆ) - புவியியல் - வரைபட வினா-விடை (தமிழ்நாடு) (8 மதிப்பெண்கள்) ........ 166

அரசுப் பொதுத்தேர்வு வினாத்தாட்கள் ........ 174


----------

# முதல் உலகப்போரின் வெடிப்பும் அதன் பின்விளைவுகளும்

வரலாறு 1



## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

1. முதல் உலகப்போரின் இறுதியில் நிலைகுலைந்து போன மூன்று பெரும் பேரரசுகள் யாவை?
***(அ)ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, உதுமானியர்***
(ஆ)ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, ரஷ்யா
(இ) ஸ்பெயின், போர்ச்சுகல், இத்தாலி
(ஈ) ஜெர்மனி, ஆஸ்திரிய-ஹங்கேரி, இத்தாலி

2. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந் தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது? ஜூன் 2023 ஏப் 2025 ஜூலை 2025 ஏப்ரல் 2026
(அ) சீனா ***(ஆ) ஜப்பான்*** (இ) கொரியா (ஈ) மங்கோலியா

3. ''ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்'' எனக் கூறியவர் யார்? மே 2022 ஜூலை 2024 ஏப்ரல் 2026
***(அ)லெனின்*** (ஆ)மார்க்ஸ் (இ) சன் யாட் சென் (ஈ) மா சே துங்

4. மார்ன் போர் எதற்காக நினைவு கூறப்படுகிறது? ஏப்ரல் 2024
(அ) ஆகாயப் போர்முறை ***(ஆ) பதுங்குக் குழிப்போர்முறை***
(இ) நீர்மூழ்கிக் கப்பல் போர்முறை (ஈ) கடற்படைப் போர்முறை

5. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச்செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
***(அ)பிரிட்டன்*** (ஆ)பிரான்ஸ்
(இ) டச்சு (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்

6. பின்லாந்தைத் தாக்கியதற்காக பன்னாட்டுச் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நாடு எது? செப் 2021
(அ) ஜெர்மனி ***(ஆ) ரஷ்யா*** (இ) இத்தாலி (ஈ) பிரான்ஸ்

**கூடுதல் வினாக்கள்:**

7. எத்தியோப்பியாவின் படைகள் இத்தாலியின் படைகளை எவ்விடத்தில் தோற்கடித்தது? செப் 2020
(அ) டெல்வில்லி (ஆ) ஆரஞ்சு நாடு ***(இ)அடோவா*** (ஈ) அல்ஜியர்ஸ்

8. ______ ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது. ஆக 2022
(அ) 1927 ***(ஆ) 1925*** (இ) 1825 (ஈ) 1952

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ***1894*** ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.

2. 1913ஆம் ஆண்டு மே மாதம் கையெழுத்திடப்பட்ட ***லண்டன்*** உடன்படிக்கையின்படி அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது. மே 2022

3. ***1902*** ஆம் ஆண்டில் ஜப்பான் இங்கிலாந்துடன் நட்பினை ஒப்பந்தம் செய்து கொண்டது.

4. பால்கனில் ***மாசிடோனியா*** நாடு பல்வகை இனமக்களைக் கொண்டிருந்தது.

5. டானென்பர்க் போரில் ***ரஷ்யா*** பேரிழப்புகளுக்கு உள்ளானது. ஏப் 2023

6. பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ***கிளமென்சோ*** ஆவார்.

7. ***1925*** ஆம் ஆண்டில் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

## III. சரியான கூற்றைத் தேர்வுசெய்யவும்.

1. (i) துருக்கியப் பேரரசு, பால்கனில் துருக்கியரல்லாத பல இனமக்களைக் கொண்டிருந்தது.
   (ii) துருக்கி மையநாடுகள் பக்கம் நின்று போரிட்டது.
   (iii) சூயஸ் கால்வாயைத் தாக்க துருக்கி மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.
   (அ) (i), (ii) ஆகியன சரி (ஆ)(i), (iii) ஆகியன சரி
   (இ) (ii), (iii) ஆகியன சரி ***(ஈ) (i), (ii), (iii) ஆகியன சரி***

2. கூற்று : ஆப்பிரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகள் மேற்கொண்ட முதற்கட்ட முயற்சிகள் ரத்தக்களரியான போர்களில் முடிந்தன.
   காரணம் : சொந்தநாட்டு மக்களிடமிருந்து கடுமையான எதிர்ப்பு இருந்தது.
   ***(அ)காரணம், கூற்று ஆகிய இரண்டும் சரி.***
   (ஆ)கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றுக்கான விளக்கம் அல்ல.
   (இ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
   (ஈ) காரணம் சரி ஆனால் கூற்று தவறு.

## IV. பொருத்துக.

1. பிரெஸ்ட்-லிடோவஸ்க் உடன்படிக்கை - ***ரஷ்யாவும் ஜெர்மனியும்***
2. ஜிங்கோயிசம் - ***இங்கிலாந்து***
3. கமால் பாட்சா - ***துருக்கி***
4. எம்டன் - ***சென்னை***
5. கண்ணாடி மாளிகை - ***வெர்செய்ல்ஸ்***

## V. சுருக்கமாக விடையளிக்கவும்.

***1. சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவத்தை நீ எவ்வாறு மதிப்பீடு செய்வாய்?*** ஏப் 2025

**சீன - ஜப்பானியப் போரின் முக்கியத்துவம்:**

(i) 1894-1895இல் நடைபெற்ற சீன-ஜப்பானியப்போரில் சீனாவை சிறிய நாடான ஜப்பான் தோற்கடித்தது உலகை வியக்க வைத்தது.

(ii) தொடர்ந்து ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய வல்லரசுகளின் எச்சரிக்கையை மீறி ஜப்பான் லியோடங் தீபகற்பத்தை ஆர்தர் துறைமுகத்துடன் சேர்த்து இணைத்துக் கொண்டது. இந்நடவடிக்கை மூலம் கிழக்கு ஆசியாவில் தானே வலிமை மிகுந்த அரசு என ஜப்பான் மெய்பித்தது.

*2. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.* ஆக 2022 ஜூலை 2024 ஜூலை 2025

**மூவர் கூட்டு நாடுகள்:**

(i) இங்கிலாந்து
(ii) பிரான்ஸ்
(iii) ரஷ்யா

*3. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?* ஏப்ரல் 2026

**ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள்:**

(i) இங்கிலாந்து - ஆரவாரமான நாட்டுப்பற்று (Jingoism)
(ii) பிரான்ஸ் - அதி தீவிரப்பற்று (Chauvinism)
(iii) ஜெர்மனி - வெறிகொண்ட நாட்டுப்பற்று (Kultur)

*4. பதுங்குக் குழிப்போர்முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?* செப் 2021 ஏப் 2023

**பதுங்குக் குழிப்போர்முறை:**

(i) போர் வீரர்களால் தோண்டப்படும் பதுங்குக் குழிகள் எதிரிகளின் சுடுதலில் இருந்து தங்களைக் காத்துக் கொண்டு பாதுகாப்பாக நிற்க உதவும்.
(ii) பிரதானப் பதுங்குக் குழிகள் ஒன்றோடொன்றும் பின்புறமுள்ள குழிகளோடும் இணைக்கப்பட்டிருக்கும். அவற்றின் வழியாக உணவு, ஆயுதங்கள், கடிதங்கள், ஆணைகள் மற்றும் புதிய வீரர்கள் வந்து சேர்வர்.

*5. முஸ்தபா கமால் பாட்சா வகித்தப் பாத்திரமென்ன?*

**முஸ்தபா கமால் பாட்சா:**

(i) துருக்கி மீண்டும் ஒரு நாடாக மறுபிறவி எடுப்பதற்கு முஸ்தபா கமால் பாட்சா முக்கிய பங்கு வகித்தார்.
(ii) கமால் பாட்சா துருக்கிக்கு விடுதலையை மட்டும் பெற்றுத்தரவில்லை. அவர் துருக்கியை நவீனமயமாக்கி, அதை எதிர்மறையான அங்கீகாரத்திலிருந்தும் மாற்றியமைத்தார்.

*6. பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான ஏதேனும் இரண்டு காரணங்களைப் பட்டியலிடுக.*

**பன்னாட்டுச் சங்கத்தின் தோல்விக்கான காரணங்கள்:**

(i) சங்கத்திற்கென்று ராணுவம் இல்லை என்பதால் தான் எடுத்த முடிவுகளை நடைமுறைப்படுத்த அதனால் இயலவில்லை.
(ii) 'கூட்டுப்பாதுகாப்பு' எனும் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்தவே முடியவில்லை.

**கூடுதல் வினாக்கள்:**

*7. ரஷ்யப்புரட்சியின் உலகளாவிய தாக்கத்தினைக் கோடிட்டுக் காட்டுக.* செப் 2020

(i) ரஷ்யப்புரட்சி உலக மக்களின் கற்பனையைத் தூண்டியது.
(ii) பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் உருவாக்கப்பட்டன.
(iii) ரஷ்ய கம்யூனிஸ்ட் அரசு காலனி நாடுகளை விடுதலைக்காக போராட ஊக்குவித்து அவர்களுக்கு முழுமையாக ஆதரவையும் நல்கியது.
(iv) நிலச்சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற இன்றியமையாதவை குறித்த விவாதங்கள் உலக அளவில் நடைபெறத் தொடங்கின.

**8. கீழ்கண்ட தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.** ஜூன் 2023

***முதல் உலகப் போர்:***

***(i) முதல் உலகப் போர் எப்பொழுது துவங்கியது?***

***(ii) மைய நாடுகள் என அழைக்கப்பட்ட நாடுகள் எவை?***

***(iii) முதல் உலகப் போரில் அமெரிக்கா எந்த ஆண்டு இறங்கியது?***

***(iv) ஜெர்மனியுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பெயர் என்ன?***

(i) 1914
(ii) ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா
(iii) 1917
(iv) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

## VI. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும்.

**1. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதி.** செப் 2020 செப் 2021 மே 2022

**ஐரோப்பிய நாடுகளின் அணி சேர்க்கைகளும் எதிர் அணி சேர்க்கைகளும்:** ஏப்ரல் 2024 ஏப்ரல் 2026

(i) 1900இல் ஐரோப்பிய வல்லரசுகளில் ஐந்து அரசுகள், இரண்டு ஆயுதமேந்திய முகாம்களாகப் பிரிந்தன. ஒரு முகாம் மையநாடுகளான ஜெர்மனி, ஆஸ்திரிய - ஹங்கேரி, இத்தாலி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. மற்றொரு முகாமில் பிரான்சும் ரஷ்யாவும் அங்கம் வகித்தன.
(ii) இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய மூவரைக் கொண்ட மூவர் கூட்டு உருவாக்கப்பட்டது.

**வன்முறை சார்ந்த தேசியம்:**

(i) தேசப்பற்றின் வளர்ச்சியோடு ‘எனது நாடு சரியோ தவறோ நான் அதை ஆதரிப்பேன்’ என்ற மனப்பாங்கு வளர்ந்தது.
(ii) இங்கிலாந்தின் ஆரவாரமான நாட்டுப்பற்று, பிரான்சின் அதி தீவிரப்பற்று, ஜெர்மனியின் வெறிகொண்ட நாட்டுப்பற்று ஆகிய அனைத்தும் தீவிர தேசியமாக போர் வெடிப்பதற்கு தீர்மானமாக பங்காற்றியது.

**ஜெர்மன் பேரரசின் ஆக்கிரமிப்பு மனப்பாங்கு:**

(i) ஜெர்மன் பேரரசரான இரண்டாம் கெய்சர் வில்லியம் ஜெர்மனியே உலகத்தின் தலைவன் எனப்பிரகடனம் செய்தார்.
(ii) இங்கிலாந்து, ஜெர்மன் கப்பற்படை தனக்கு எதிரானதே என முடிவு செய்தது. ஆகவே, இங்கிலாந்தும் கப்பற்படை விரிவாக்கப் போட்டியில் இறங்கவே இரு நாடுகளுக்குமிடையிலான பதற்றம் மேலும் அதிகரித்தது.

**பிரான்ஸ் ஜெர்மனியோடு கொண்ட பகை:**

(i) பிரான்சும் ஜெர்மனியும் பழைய பகைவர்களாவர்.
(ii) மொராக்கோ விவகாரத்தில் ஜெர்மனியின் தலையீடு இக்கசப்புணர்வை மேலும் அதிகரித்தது.

**பால்கன் பகுதியில் ஏகாதிபத்திய அரசியல் அதிகாரத்திற்கான வாய்ப்பு:**

(i) பாஸ்னியாவையும் ஹெர்சகோவினாவையும் தான் இணைத்துக் கொண்டதாக ஆஸ்திரியா அறிவித்தது. ஆஸ்திரியாவின் இவ்வறிவிப்பு செர்பியாவில் தீவிரமான எதிர்ப்பைத் தூண்டியது.
(ii) இதன் தொடர்பில் ஜெர்மனி ஆஸ்திரியாவிற்கு உறுதியான ஆதரவை நல்கியது. ஆஸ்திரியாவிற்கும் செர்பியாவிற்குமான இப்பகை 1914இல் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

**பால்கன் போர்கள்:**

(i) மாசிடோனியாவைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் கிரீஸ், செர்பியா, பல்கேரியா பின்னர் மாண்ட் நீக்ரோ ஆகிய நாடுகளிடையே போட்டிகள் நிலவின. அவை பால்கன் கழகம் எனும் அமைப்பை உருவாக்கின.
(ii) அல்பேனியா எனும் புதியநாடு உருவாக்கப்பட்டது. மாசிடோனியாவை ஏனைய பால்கன் நாடுகள் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டன. துருக்கி, கான்ஸ்டாண்டி நோபிளைச் சுற்றியுள்ள பகுதிகளை மட்டும் கொண்ட அரசாகச் சுருக்கப்பட்டது.

**உடனடி காரணம்:**

(i) 1914 ஜூன் 28ஆம் நாள் பேரரசரின் மகனான பிரான்ஸ் பெர்டினாண்டு, பிரின்ஸப் என்ற பாஸ்னிய செர்பியனால் கொலை செய்யப்பட்டார்.

(ii) செர்பியாவிற்கு ஆதரவாகத் தலையிட ரஷ்யா படைகளைத் திரட்டுகிறது என்னும் வதந்தியால் ஜெர்மனி முதல் தாக்குதலைத் தானே தொடுப்பது என முடிவு செய்தது.

***2. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக்காட்டுக.*** ஜூன் 2023 | ஏப் 2025

**ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்கள்:**

(i) போரைத் தொடங்கிய குற்றத்தைச் செய்தது ஜெர்மனி என்பதால் போர் இழப்புகளுக்கு ஜெர்மனி இழப்பீடு வழங்கவேண்டும் எனவும் மைய நாடுகள் அனைத்தும் போர் இழப்பீட்டுத் தொகையை வழங்கவும் வலியுறுத்தப்பட்டன.

(ii) ஜெர்மன் படை 1,00,000 வீரர்களை மட்டுமே கொண்டதாக அளவில் சுருக்கப்பட்டது. சிறிய கப்பற்படையொன்றை மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டது.

(iii) ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய இரண்டின் ஒருங்கிணைப்பு தடைசெய்யப்பட்டது. ஜெர்மனியின் அனைத்துக் காலனிகளும் பன்னாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பு நாடுகளாக ஆக்கப்பட்டன.

(iv) ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்ட பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கையையும், பல்கேரியாவுடன் மேற்கொள்ளப்பட்ட புகாரெஸ்ட் உடன்படிக்கையையும் திரும்பப் பெற்றுகொள்ள ஜெர்மனி வலியுறுத்தப்பட்டது.

(v) அல்சேஸ்-லொரைன் பகுதிகள் பிரான்சுக்குத் திருப்பித் தரப்பட்டன.

(vi) முன்னர் ரஷ்யாவின் பகுதிகளாக இருந்த பின்லாந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியன சுதந்திரநாடுகளாகச் செயல்படும்.

(vii) வடக்கு ஷ்லெஸ்விக் டென்மார்க்கிற்கும் சிறிய மாவட்டங்கள் பெல்ஜியத்திற்கும் வழங்கப்பட்டன.

(viii) போலந்து மீண்டும் உருவாக்கப்பட்டது. ரைன்நதியின் கிழக்குக்கரைப்பகுதிபடை நீக்கம் செய்யப்பட்டது.

***3. லெனின் தலைமையிலான ரஷ்யப் புரட்சியின்போக்கினை விளக்குக.***

**ரஷ்யப் புரட்சி:**

(i) அக்டோபர் திங்களில் லெனின் போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் குழுவை உடனடிப்புரட்சி குறித்து முடிவு செய்யக் கேட்டுக்கொண்டார்.

(ii) டிராட்ஸ்கி ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தார்.

(iii) நவம்பர் 7இல் முக்கியமான அரசுக்கட்டிடங்கள், குளிர்கால அரண்மனை, பிரதமமந்திரியின் தலைமை அலுவலகங்கள் ஆகியவை அனைத்தும் ஆயுதமேந்திய ஆலைத் தொழிலாளர்களாலும், புரட்சிப்படையினராலும் கைப்பற்றப்பட்டன.

(iv) 1917 நவம்பர் 8இல் ரஷ்யாவில் புதிய கம்யூனிஸ்ட் அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. போல்ஷ்விக் கட்சிக்கு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி எனப் புதுப்பெயரிடப்பட்டது.

**புரட்சியின் விளைவுகள்:**

(i) ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியால் குறுகிய காலத்தில் ரஷ்யாவில் எழுத்தறிவின்மையையும், வறுமையையும் ஒழிக்க முடிந்தது. வாக்குரிமை முதலாகப் பெண்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட்டன.

(ii) ரஷ்யாவின் தொழிற்துறையும், வேளாண்மையும் உன்னதமான வளர்ச்சியைப் பெற்றன. தொழிற்சாலைகளும், வங்கிகளும் தேசியமயமாக்கப்பட்டன. நிலம் சமுதாயத்தின் சொத்தாக அறிவிக்கப்பட்டது. ஏழை விவசாயிகளுக்கு நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

(iii) போரிலிருந்து விலகாமலிருந்ததே தற்காலிக அரசின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணமென லெனின் நினைத்தார். எனவே அவர் உடனடியாக அமைதிக்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

(iv) மையநாடுகளின் கடுமையான நிபந்தனைகள் குறித்துக் கவலைகொள்ளாமல், புதிய அரசை உருவாக்குவதில் கவனம் செலுத்துவதற்காக அவர் போரிலிருந்து விலகினார். 1918இல் பிரெஸ்ட் - லிடோவஸ்க் உடன்படிக்கை கையெழுத்திடப்பட்டது.

***4. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.*** ஏப்ரல் 2024 ஜூலை 2025

<u>பன்னாட்டுச் சங்கத்தின் பணிகள்:</u>

(i) 1920 - 1925ஆகிய ஆண்டுகளிடையே பன்னாட்டுச் சங்கம் பல சிக்கல்களைத் தீர்த்துவைக்க அழைக்கப்பட்டது. மூன்று பிரச்சனைகளை தீர்த்து வைப்பதில் சங்கம் வெற்றி பெற்றது.

(ii) 1920இல் பின்லாந்தின் மேற்கு கடற்கரைக்கும் சுவீடனின் கிழக்குக் கடற்கரைக்கும் இடையில் அமைந்திருந்த ஆலேண்டு தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதில் பின்லாந்திற்கும் சுவீடனுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டது. பன்னாட்டுச் சங்கம் அத்தீவுகள் பின்லாந்திற்கே உரியது என தீர்ப்பளித்தது.

(iii) அடுத்த ஆண்டில் போலந்திற்கும் ஜெர்மனிக்குமிடையே மேலை சைலேஷியா பகுதியில் எல்லைப் பிரச்சனை ஏற்பட்டது. அப்பிரச்சனையைச் சங்கம் வெற்றிகரமாகத் தீர்த்து வைத்தது.

(iv) மூன்றாவது பிரச்சனை கிரீஸ், பல்கேரியா நாடுகளிடையே ஏற்பட்டது. கிரீஸ் பல்கேரியாவின் மீது படையெடுத்த போது பன்னாட்டுச் சங்கம் போர் நிறுத்தம் செய்ய உத்தரவிட்டது. விசாரணைக்குப்பின் சங்கம் கிரீஸின் மீது குற்றஞ்சாட்டி, கிரீஸ் போர் இழப்பீடு வழங்க வேண்டுமெனத் தீர்மானித்தது.

(v) ஆகவே, 1925இல் லொக்கர்னோ உடன்படிக்கை கையெழுத்தாகின்றவரை பன்னாட்டுச் சங்கம் வெற்றிகரமாக செயலாற்றியது.

(vi) லொக்கார்னோ உடன்படிக்கையின்படி ஜெர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இங்கிலாந்து, இத்தாலி ஆகிய நாடுகள் மேற்கு ஐரோப்பாவில் பரஸ்பரம் அமைதிக்கு உத்தரவாதமளித்தன.

(vii) இதன் பின்னர் ஜெர்மனி பன்னாட்டுச்சங்கத்தில் இணைந்தது. பாதுகாப்புக் குழுவிலும் நிரந்தர இடமளிக்கப்பட்டது.

(viii) இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்காவும் ரஷ்யாவும் சங்கத்தினுடைய அரசியல் அல்லாத நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கின.

<u>கூடுதல் வினாக்கள்:</u>

***5. பன்னாட்டுச் சங்கத்தின் அமைப்பு மற்றும் உறுப்புகள் பற்றி விவரிக்கவும்.*** மே 2022

<u>அமைப்பு:</u>

(i) இச்சங்கத்திற்கான கூட்டு ஒப்பந்த ஆவணம் பாரிஸ் அமைதி மாநாட்டில் தயார் செய்யப்பட்டு முதல் உலகப்போருக்குப்பின் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு உடன்படிக்கையிலும் சேர்க்கப்பட்டது.

(ii) இவ்வமைப்புக்கான அரசியல் அமைப்பு விதிகளை உருவாக்குவதில் இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆலோசனைகள் மேலோங்கியிருந்தன.

<u>உறுப்புகள்:</u>

(i) <u>பொதுச்சபை:</u> ஒவ்வொரு உறுப்பு நாடும் இச்சபையில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

(ii) <u>செயற்குழு:</u> இதுவே முடிவுகளை செயல்படுத்தும் அமைப்பாகும்.

(iii) <u>செயலகம்:</u> ஜெனீவாவில் அமைந்து இருந்தது.

(iv) <u>பன்னாட்டு நீதிமன்றம்:</u> தி ஹேக் நகரில் அமைக்கப்பட்டது.

(v) <u>பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு:</u> ஒரு செயலகம் மற்றும் ஒவ்வொரு உறுப்பு நாட்டிலிருந்தும் நான்கு உறுப்பினர்கள் கொண்டது ஆகும்.

# இந்தியா - அமைவிடம், நிலத்தோற்றம் மற்றும் வடிகாலமைப்பு

புவியியல் 1

## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. இந்தியாவின் வடக்கு தெற்கு பரவல்.
(அ) 2500 கி.மீ (ஆ)2933 கி.மீ ***(இ)<u>3214 கி.மீ</u>*** (ஈ) 2814 கி.மீ

2. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
(அ) நர்மதா (ஆ)கோதாவரி ***(இ)<u>கோசி</u>*** (ஈ) தாமோதர்

3. மூன்று பக்கம் நீரால் சூழப்பட்ட பகுதி ______ என அழைக்கப்படுகிறது. ஜூலை 2024
(அ) கடற்கரை (ஆ) தீவு ***(இ)<u>தீபகற்பம்</u>*** (ஈ) நீர்ச்சந்தி

4. பாக் நீர்சந்தி மற்றும் மன்னார் வளைகுடா ______ ஐ இந்தியாவிடமிருந்து பிரிக்கிறது. மே 2022 ஜூன் 2023
(அ) கோவா (ஆ)மேற்கு வங்காளம் ***(இ)<u>இலங்கை</u>*** (ஈ) மாலத்தீவு

5. தென்னிந்தியாவின் மிக உயரமான சிகரம் ______.
(அ) ஊட்டி (ஆ) கொடைக்கானல் ***(இ)<u>ஆனை முடி</u>*** (ஈ) ஜின்டா கடா

6. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ______. ஏப் 2023
(அ) பாபர் (ஆ)தராய் ***(இ)<u>பாங்கர்</u>*** (ஈ) காதர்

7. பழவேற்காடு ஏரி ______ மாநிலங்களுக்கிடையே அமைந்துள்ளது. ஆக 2022 ஏப்ரல் 2024
(அ) மேற்கு வங்காளம் மற்றும் ஒடிசா (ஆ)கர்நாடகா மற்றும் கேரளா
(இ) ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ***(ஈ) <u>தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம்</u>***

**<u>கூடுதல் வினாக்கள்:</u>**

8. பொருந்தாததைத் தேர்ந்தெடுக்கவும். செப் 2020
(அ) கொல்லேறு ஏரி ***(ஆ) <u>வேம்பநாடு ஏரி</u>***
(இ) சிலிகா ஏரி (ஈ) பழவேற்காடு ஏரி

## II. பொருத்துக.

1. சாங்போ - ***பிரம்மபுத்ரா***
2. யமுனை - ***கங்கை ஆற்றின் துணை ஆறு***
3. புதிய வண்டல் படிவுகள் - ***காதர்***
4. காட்வின் ஆஸ்டின் (K2) - ***இந்தியாவின் உயர்ந்த சிகரம்***
5. சோழ மண்டலக்கடற்கரை - ***தென்கிழக்கு கடற்கரைச் சமவெளி***

## III. காரணம் கூறுக.

***1. இமயமலைகள் மடிப்புமலைகள் என அழைக்கப்படுகின்றன.*** மே 2022

(i) புவிமேலோட்டு பேரியக்க விசைகள் காரணமாக புவிமேலோடு மடிக்கப்பட்டு, மடிப்பு மலைகளாக உருவாகின.

(ii) எனவே, இமயமலைகள் மடிப்பு மலைகள் என அழைக்கப்படுகின்றன.

***2. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்.*** ஏப்ரல் 2024

(i) வட இந்திய ஆறுகள் வடக்கே உள்ள இமயமலையில் உற்பத்தியாகின்றன.

(ii) கோடைக் காலங்களில் பனி உருகுவதினால் நீரைப் பெறுகின்றன.

(iii) மழைக்காலங்களில் பருவக் காற்று மழைப்பொழிவின் மூலம் நீரைப் பெறுகின்றன.

(iv) இவ்வாறுகள் ஆண்டு முழுவதும் நிலையான நீரோட்டத்துடன் அமையப் பெறுவதால் வற்றாத ஆறுகள் எனப்படுகின்றன.

***3. தென்னிந்திய ஆறுகள் கிழக்கு நோக்கிப்பாயும் ஆறுகளாகும்.***

(i) தென்னிந்திய நதிகள் இந்தியாவின் கிழக்குப்பகுதியில் உள்ள வங்கக்கடலில் கலக்கின்றன.

(ii) எனவே, இவை கிழக்கு நோக்கிப் பாயும் நதிகள் ஆகும்.

**கூடுதல் வினாக்கள்:**

***4. கிழக்கு தொடர்ச்சி மலையானது தொடர்ச்சியற்ற குன்றுகளாகும்.*** செப் 2020 ஏப் 2023 ஜூலை 2024

(i) கிழக்கு தொடர்ச்சி மலையானது தொடர்ச்சியற்ற குன்றுகளாகும்.

(ii) ஏனெனில் இவை, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பென்னாறு மற்றும் காவிரி போன்ற ஆறுகளால் அரிக்கப்பட்டு பிளவுபட்ட குன்றுகளாக காட்சியளிக்கின்றன.

## IV. வேறுபடுத்துக.

***1. இமயமலை ஆறுகள் மற்றும் தீபகற்ப ஆறுகள்.***

| | இமயமலை ஆறுகள் | தீப கற்ப ஆறுகள் |
|---|---|---|
| (i) | நீளமானவை மற்றும் அகலமானவை | குறுகலானவை மற்றும் நீளம் குறைந்தவை |
| (ii) | வற்றாத நதிகள் | வற்றும் ஆறுகள் |
| (iii) | நீர்மின் சக்தி உற்பத்தி செய்ய இயலாது | நீர்(புனல்) மின்சாரம் உற்பத்திக்கு ஏற்றது |
| (iv) | ஆறுகளின் மத்திய மற்றும் கீழ்நிலைப் பகுதிகள் போக்குவரத்திற்கு ஏற்றது | நீர்வழிப் போக்குவரத்துக்குப் பயன்படாதவை |

***2. மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்.***

ஆக 2022 ஏப் 2023 ஜூலை 2025 ஏப்ரல் 2026

| | மேற்குத் தொடர்ச்சி மலைகள் | கிழக்குத் தொடர்ச்சி மலைகள் |
|---|---|---|
| (i) | இம்மலைகள் தீபகற்ப பீடபூமியின் மேற்கு விளிம்புப் பகுதியில் காணப்படுகிறது. | இம்மலைகள் தீபகற்ப பீடபூமியின் கிழக்கு விளிம்புப் பகுதியில் அமைந்துள்ளது. |
| (ii) | இம்மலையின் வடபகுதி சயாத்ரி என்று அழைக்கப்படுகிறது. | இம்மலைத்தொடர் பூர்வாதிரி என்று அழைக்கப்படுகிறது. |
| (iii) | தொடர்ச்சியான மலைகள் | தொடர்ச்சியானவை அல்ல. |
| (iv) | ஆனைமலை, ஏலக்காய் மலை மற்றும் பழனிமலை ஆகியவை சந்திக்கும் பகுதியில் ஆனைமுடிச் சிகரம் அமைந்துள்ளது. | மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பென்னாறு மற்றும் காவிரி போன்ற ஆறுகளால் அரிக்கப்பட்டு பிளவுபட்ட குன்றுகளாகக் காட்சியளிக்கின்றன. |

*3. மேற்கு கடற்கரைச் சமவெளி மற்றும் கிழக்கு கடற்கரைச் சமவெளி.* செப் 2020 செப் 2021

| | மேற்கு கடற்கரைச் சமவெளி | கிழக்கு கடற்கரைச் சமவெளி |
|---|---|---|
| (i) | மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் அரபிக் -கடலுக்கும்இடையே அமைந்துள்ளது. | கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் வங்காள விரிகுடாவிற்கும் இடையே அமைந்துள்ளது. |
| (ii) | வடக்கே கட்ச் வளைகுடாவிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை நீண்டுள்ளது. | மேற்கு வங்காளம், ஒடிசா, ஆந்திரபிரதேசம் மற்றும் தமிழ்நாடு வரை நீண்டுள்ளது. |
| (iii) | மணல் கடற்கரை, மணல் குன்றுகள், கழிமுகங்கள், காயல்கள் மற்றும் சரளை மணல் மேடுகளைக் கொண்டது. | வண்டல்மண் படிவுகளால் நன்கு வரையறுக்கப்பட்ட கடற்கரையைக் கொண்டது. |
| (iv) | வேம்ப நாடு இப்பகுதியில் உள்ளது. | சிலிகா ஏரி இப்பகுதியில் உள்ளது. |

## V. சுருக்கமாக விடையளி.

*1. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.* ஏப்ரல் 2026

**இந்தியாவின் அண்டை நாடுகள்:**

(i) வடமேற்கு - பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான்
(ii) வடக்கு - சீனா, நேபாளம், பூடான்
(iii) கிழக்கு - வங்காள தேசம், மியான்மர்
(iv) தெற்கு - இலங்கை

*2. இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றி கூறுக.* ஆக 2022

**இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம்:**

(i) மேற்கில் உள்ள குஜராத் முதல் கிழக்கில் உள்ள அருணாச்சலப்பிரதேசம் வரை இந்தியா ஏறத்தாழ 30 தீர்க்கக் கோடுகளைக் கொண்டுள்ளது.
(ii) இந்தியாவின் கிழக்கிலுள்ள அருணாச்சல பிரதேசத்தில் மேற்கிலுள்ள குஜராத்தைக் காட்டிலும் இரண்டு மணி நேரம் முன்னதாகவே சூரியன் உதயமாகிறது.
(iii) இந்த நேர வேறுபாட்டை தவிர்ப்பதற்காக, இந்தியாவின் மத்திய தீர்க்க ரேகையான $82^{o}30'$ கிழக்குத் தீர்க்கரேகையின் தலநேரம், இந்திய திட்ட நேரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.
(iv) இந்திய திட்ட நேரமானது கீரின்வீச் சராசரி நேரத்தை விட 5 மணி 30 நிமிடம் முன்னதாக உள்ளது.

*3. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.* ஏப் 2025

**தக்காண பீடபூமி:**

(i) தக்காணபீடபூமி, தீபகற்ப பீடபூமியில் அமைந்துள்ள மிகப்பெரிய இயற்கை அமைப்பைக் கொண்டதாகும்.
(ii) இது தோராயமாக முக்கோண வடிவம் கொண்டது.
(iii) வடமேற்குத் திசையில் விந்திய, சாத்பூரா மலைத்தொடர்களையும், வடக்கில் மகாதேவ், மைக்காலா குன்றுகளையும், வடகிழக்கில் இராஜ்மகால் குன்றுகளையும், மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலைகளையும், கிழக்கில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளையும் எல்லைகளாகக் கொண்டது.
(iv) சுமார் 7 லட்சம் சதுர கி.மீ பரப்பளவையும் கடல் மட்டத்திலிருந்து 500 மீ முதல் 1000 மீ உயரம் வரையும் அமைந்துள்ளது.

*4. இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைப் பற்றி குறிப்பிடுக.* ஜூன் 2023 ஜூலை 2024 ஜூலை 2025

**இந்தியாவின் மேற்கு நோக்கி பாயும் ஆறுகள்:**

(i) நர்மதை
(ii) தபதி
(iii) மாஹி

*5. இலட்சத்தீவுக் கூட்டங்கள் பற்றி விவரி.* மே 2022

**இலட்சத்தீவுக் கூட்டங்கள்:**

(i) இலட்சத்தீவு, மினிக்காய் மற்றும் அமினித் தீவுக் கூட்டங்களை 1973ஆம் ஆண்டு முதல் இலட்சத்தீவுகள் என அழைக்கப்படுகிறது.
(ii) இந்தியாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இவை முருகைப் பாறைகளால் ஆனவை.
(iii) இத்தீவுகள் சுமார் 32 ச.கி.மீ பரப்பளவைக் கொண்டவை.
(iv) இவற்றின் தலைநகரம் காவரட்தி ஆகும்.
(v) இத்தீவுக்கூட்டங்களை $8^{O}$ கால்வாய் மாலத்தீவிலிருந்து பிரிக்கிறது.
(vi) இங்கு மனிதர்கள் வசிக்காத பிட் தீவு பறவைகள் சரணாலயத்திற்கு பெயர் பெற்றது.

## VI. ஒரு பத்தியில் விடையளிக்கவும்.

*1. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.*

**இமயமலையின் உட்பிரிவுகள்:** செப் 2021 ஆக 2022 ஏப்ரல் 2024

இமயமலை மூன்று பெரும் உட்பிரிவுகளைக் கொண்டது. அவை, ட்ரான்ஸ் இமயமலைகள், இமயமலைகள் மற்றும் கிழக்கு இமயமலை/பூர்வாஞ்சல் குன்றுகள் ஆகும்.

**ட்ரான்ஸ் இமயமலைகள் (மேற்கு இமயமலைகள்):**

(i) ட்ரான்ஸ் இமயமலைகள் ஜம்மு-காஷ்மீர் மற்றும் திபெத் பீடபூமியில் அமைந்துள்ளது.
(ii) இதன் பரப்பளவு திபெத்தில் அதிகமாக இருப்பதால் இவை “திபெத்தியன் இமயமலை” எனவும் அழைக்கப்படுகிறது.
(iii) இப்பகுதியில் காணப்படும் பாறை அமைப்புகள் கடலடி உயிரினப் படிமங்களைக் கொண்ட டெர்சியரி கிரானைட் பாறைகளாகும்.
(iv) இங்குள்ள முக்கியமான மலைத் தொடர்கள் சாஸ்கர், லாடக், கைலாஸ் மற்றும் காரகோரம் ஆகும்.

**இமயமலைகள்:**

(i) இவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.
(ii) **உள் இமயமலைகள் / இமாத்ரி:** இம்மலையில் மிக உயர்ந்த சிகரங்களான எவரெஸ்ட் (8848 மீ) மற்றும் கஞ்சன் ஜங்கா (8586 மீ) ஆகியவை அமைந்துள்ளன. கங்கோத்தரி, சியாச்சின் போன்ற பனியாறுகள் காணப்படுகின்றன.
(iii) **மத்திய இமயமலைகள் / இமாச்சல்:** பீர்பாஞ்சல், தல்லதார் மற்றும் மகாபாரத் ஆகிய மலைகள் இத்தொடரில் காணப்படுகின்றன. புகழ்பெற்ற கோடை வாழிடங்கலான சிம்லா, முசௌரி, நைனிடால், அல்மோரா, ரானிகட் மற்றும் டார்ஜிலிங் போன்ற கோடை வாழிடங்கள் இம்மலைத் தொடரில் அமைந்துள்ளன.
(iv) **வெளி இமயமலை/சிவாலிக்:** இம்மலைத் தொடரானது ஜம்மு காஷ்மீரில் இருந்து அசாம் வரை நீண்டுள்ளது. இவை கிழக்குப் பகுதியில் டூயர்ஸ் எனவும், மேற்கு பகுதியில் டூன்கள் எனவும் அழைக்கப்படுகிறது. இப்பகுதிகள் குடியிருப்புகளின் வளர்ச்சிக்கு ஏற்றதாக உள்ளது.

**பூர்வாஞ்சல் குன்றுகள்:**

(i) இவை இமயமலையின் கிழக்கு கிளையாகும்.

(ii) இது வடகிழக்கு மாநிலங்களில் பரவியுள்ளது.

(iii) பெரும்பாலான குன்றுகள் மியான்மர் மற்றும் இந்திய எல்லைகளுக்கிடையே காணப்படுகின்றன.

(iv) டாப்லா, அபோர், மிஸ்மி, பட்காய்பம், நாகா, மாணிப்பூர், மிக்கீர், காரோ, காசி மற்றும் ஜெயந்தியா குன்றுகள் அனைத்தும் ஒன்றிணைந்து பூர்வாஞ்சல் மலைகள் என்று அழைக்கப்படுகின்றது.

**இமயமலையின் முக்கியத்துவம்:**

(i) தென்மேற்குப் பருவக்காற்றைத் தடுத்து வட இந்தியப் பகுதிக்கு கனமழையைக் கொடுக்கிறது.

(ii) இந்தியத் துணைக்கண்டத்திற்கு இயற்கை அரணாக அமைந்துள்ளது.

(iii) வற்றாத நதிகளின் பிறப்பிடமாக உள்ளது. எ.கா. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் பிற ஆறுகள்.

(iv) இயற்கை அழகின் காரணமாக வடக்கு மலைகள் சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாகத் திகழ்கிறது.

(v) பல கோடை வாழிடங்களும், புனிதத்தலங்களான அமர்நாத், கேதர்நாத், பத்ரிநாத் மற்றும் வைஷ்ணவிதேவி கோயில்களும் இம்மலைத்தொடரில் அமைந்துள்ளன.

(vi) வனப்பொருட்கள் சார்ந்த தொழிலகங்களும் மூலப்பொருட்களை அளிக்கிறது.

(vii) மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்காற்றைத் தடுத்து இந்தியாவை குளிரிலிருந்து பாதுகாக்கிறது.

(viii) இமயமலை பல்லுயிர் மண்டலத்திற்கு பெயர் பெற்றவை.

**2. *தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.*** ஏப் 2025 ஜூலை 2025

**தீபகற்ப ஆறுகள்:**

(i) தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் தீபகற்ப ஆறுகள் எனப்படுகின்றன. பெரும்பாலான ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன. இவை பருவகால ஆறுகள் அல்லது வற்றும் ஆறுகள் எனப்படும்.

(ii) அவை பாயும் திசையின் அடிப்படையில் இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, கிழக்கு நோக்கிப்பாயும் ஆறுகள் மற்றும் மேற்கு நோக்கிப்பாயும் ஆறுகள்.

(iii) **கிழக்கு நோக்கிப்பாயும் ஆறுகள்:**

**மகாநதி:**

- நீளம் : 851 கி.மீ
- உற்பத்தி : சத்தீஸ்கர் மாநிலத்திலுள்ள ராய்ப்பூர் மாவட்டத்திலுள்ள சிகாவிற்கு அருகில்.
- துணை ஆறுகள்: சீநாத், டெலன், சந்தூர், சித்ரட்லா, கெங்குட்டி மற்றும் நன்.
- கலக்குமிடம் : வங்காள விரிகுடா.

**கோதாவரி (விருத்தகங்கா):**

- நீளம் : 1465 கி.மீ
- உற்பத்தி : மகாராஷ்ட்ரா மாநிலம் நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலை.
- துணை ஆறுகள் : பூர்ணா, பென்கங்கா, பிரனிதா, இந்திராவதி, தால் மற்றும் சாலாமி.
- கலக்குமிடம் : வங்காள விரிகுடா.

**கிருஷ்ணா:**

- நீளம் : 1400 கி.மீ
- உற்பத்தி : மகாராஷ்ட்டிரா மாநிலத்திலுள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் மகா பலேஷ்வர் பகுதி.

♦ துணை ஆறுகள்: கொய்னா, பீமா, முசி, துங்கபத்ரா மற்றும் பெடவாறு.
♦ கலக்குமிடம் : வங்காள விரிகுடா.

**காவிரி:** (தென் இந்தியாவின் கங்கை)

♦ நீளம் : சுமார் 800 கி.மீ
♦ உற்பத்தி : கர்நாடக மாநிலத்தில் குடகு மலையிலுள்ள தலைக் காவேரி
♦ துணை ஆறுகள்: ஹரங்கி, ஹேமாவதி, கபினி, பவானி, அர்காவதி, நொய்யல் மற்றும் அமராவதி.
♦ கலக்குமிடம்: வங்காள விரிகுடா.

(iv) **மேற்கு நோக்கிப்பாயும் ஆறுகள்:**

**நர்மதை:**

♦ நீளம் : 1312 கி.மீ
♦ உற்பத்தி: மத்திய பிரதேசத்தில் உள்ள அமர்கண்டாக் பீடபூமியில் 1057 மீ உயரத்தில்.
♦ துண ஆறுகள்: பர்னா, ஹலுன், ஹெரன், பஞ்சர், தூதி, சக்கார், டவா மற்றும் கோலர்.
♦ கலக்குமிடம்: அரபிக் கடல்

**தபதி:**

♦ நீளம் : 724 கி.மீ
♦ உற்பத்தி: மத்திய பிரதேசத்தில் உள்ள பெட்டுல் மாவட்டத்தில் கடல் மட்டத்திலிருந்து 752 மீ உயரத்தில் முல்டாய் என்ற இடம்.
♦ துணை ஆறுகள்: வாகி, கோமை, அருணாவதி, அணர், நீசு, புரெ, பஞ்சரா மற்றும் போரி.
♦ கலக்குமிடம் : அரபிக்கடல்.

(v) **தீபகற்ப ஆறுகளின் சிறப்புகள்:**

♦ மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகின்றன.
♦ குறுகலான மற்றும் நீளம் குறைந்தவை.
♦ வற்றும் ஆறுகள்.
♦ நீர் (புனல்) மின்சாரம் உற்பத்திக்கு ஏற்றது.
♦ நீர்வழி போக்குவரத்திற்குப் பயன்படாதவை.

***3. கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.*** ஏப்ரல் 2026

**கங்கை ஆற்று வடிநிலம்:**

(i) கங்கை ஆறு உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள உத்தர்காசி மாவட்டத்தில் 7010 மீ உயரத்தில் கங்கோத்ரி என்னுமிடத்தில் உற்பத்தியாகிறது.
(ii) இந்நதியின் நீளம் சுமார் 2525 கி.மீ. ஆகும்.
(iii) கங்கையாற்றின் தொகுப்பு 8,61,404 ச.கி.மீ பரப்பளவில் பாயும் இந்தியாவில் மிகப்பெரிய வடிகால் அமைப்பைக் கொண்டதாகும்.
(iv) கங்கைச் சமவெளியில் பல நகரங்கள் ஆற்றங்கரையையொட்டியும் அதிக மக்கள் அடர்த்தி கொண்டதாகவும் உள்ளன.
(v) வட பகுதியிலிருந்து கோமதி, காக்ரா, கண்டக், கோசி மற்றும் தென்பகுதியிலிருந்து யமுனை, சோன், சாம்பல் போன்ற துணையாறுகள் கங்கையுடன் இணைகின்றன.
(vi) வங்கதேசத்தில், கங்கை பத்மா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.
(vii) கங்கை மற்றும் பிரம்மபுத்ரா ஆறுகள் சேர்ந்து உலகிலேயே மிகப்பெரிய டெல்டாவை உருவாக்கி பின் வங்காள விரிகுடாவில் கலக்கின்றன.

**கூடுதல் வினாக்கள்:**

***4. தீபகற்ப பீடபூமிகள் பற்றி விவரிக்கவும்.*** ஏப் 2023

(i) தீபகற்ப பீடபூமி வட இந்திய சமவெளிக்கு தெற்கே அமைந்துள்ளது. இது சுமார் 16 இலட்சம் சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டு இந்தியாவின் மிகப்பெரிய இயற்கைப் பிரிவாக உள்ளது.

(ii) தீபகற்ப பீடபூமி தொன்மையான பாறை அமைப்புகளையும், பல குன்றுகளையும் பல்வேறு சிறு பீடபூமிகளையும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளால் பிளவுபட்டும் காணப்படுகின்றன.

(iii) வடமேற்கே ஆரவல்லி மலைத்தொடர், வடக்கு மற்றும் வடகிழக்கே பண்டல்கண்ட் உயர்நிலப்பகுதி, கைமூர், ராஜ்மகால் குன்றுகள், மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலைகள், கிழக்கே கிழக்குத் தொடர்ச்சி மலைகள் ஆகியன இப்பீடபூமியின் எல்லைகளாக அமைந்துள்ளன.

(iv) இப்பீடபூமியின் பெரும்பகுதி கடல் மட்டத்திலிருந்து சுமார் 600 மீ உயரத்தைக் கொண்டது.

(v) ஆனைமலையில் அமைந்துள்ள 2695 மீ உயரமுடைய ஆனைமுடிச்சிகரம் இப்பீட பூமியின் உயர்ந்த சிகரமாகும்.

(vi) இப்பீடபூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரிந்துள்ளது.

(vii) இது கோண்டுவானா நிலப்பகுதியின் ஒரு பகுதியாகும்.

(viii) ஆற்றின் மூப்பு நிலைக்காரணமாக ஆறுகள், அகலமான மற்றும் ஆழமற்ற பள்ளத்தாக்குகளை உருவாக்கியுள்ளன. நர்மதை ஆறு தீபகற்ப பீடபூமியை இரு பெரும் பகுதிகளாக பிரிக்கின்றது. இதன் வட பகுதியை மத்திய உயர்நிலங்கள் என்றும், தென் பகுதியை தக்காண பீடபூமி என்றும் அழைப்பர்.

# இந்தியா - காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்

புவியியல் 2



## I. சரியான விடையைத் தேர்வு செய்க.

1. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ______. செப் 2021 ஏப்ரல் 2026
(அ) தமிழ்நாடு (ஆ)கேரளா ***(இ)<u>பஞ்சாப்</u>*** (ஈ) மத்தியப் பிரதேசம்

2. கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு ______ காற்றுகள் உதவுகின்றன.
(அ) லூ (ஆ)நார்வெஸ்டர்ஸ் ***(இ)மாஞ்சாரல்*** (ஈ) ஜெட் காற்றோட்டம்

3. ஒரே அளவு மழைபெறும் இடங்களை இணைக்கும் கோடு ______ ஆகும். ஆக 2022
***(அ) சம மழைக்கோடுகள்*** (ஆ)சம அழுத்தக் கோடுகள்
(இ) சமவெப்ப கோடுகள் (ஈ) அட்சக் கோடுகள்

4. இந்தியாவின் காலநிலை ______ ஆக பெயரிடப்பட்டுள்ளது. ஏப் 2025
(அ) அயன மண்டல ஈரக் காலநிலை
(ஆ)நிலநடுக்கோட்டுக் காலநிலை
***(இ)அயனமண்டல பருவக்காற்றுக் காலநிலை***
(ஈ) மித அயனமண்டலக் காலநிலை

# இந்திய அரசியலமைப்பு

குடிமையியல் 1

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. கீழ்க்காணும் வரிசையில் 'முகவுரை' பற்றிய சரியான தொடர் எது? ஆக 2022
(அ) குடியரசு, ஜனநாயக, சமயச் சார்பற்ற, சமதர்ம, இறையாண்மை.
(ஆ)இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, குடியரசு, ஜனநாயக.
(இ) இறையாண்மை, குடியரசு, சமயச் சார்பற்ற, சமதர்ம, ஜனநாயக.
***(ஈ) இறையாண்மை, சமதர்ம, சமயச் சார்பற்ற, ஜனநாயக, குடியரசு.***

2. இந்திய அரசியலமைப்பின் முகவுரை எத்தனை முறை திருத்தப்பட்டது? ஜூன் 2023
***(அ)ஒருமுறை*** (ஆ)இரு முறை
(இ) மூன்று முறை (ஈ) எப்பொழுதும் இல்லை

3. ஒரு வெளிநாட்டவர், கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?
(அ) வம்சாவளி (ஆ)பதிவு
***(இ)இயல்புரிமை*** (ஈ) மேற்கண்டஅனைத்தும்

4. மாறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.
(அ) சமத்துவ உரிமை (ஆ)சுரண்டலுக்கெதிரான உரிமை
***(இ)சொத்துரிமை*** (ஈ) கல்வி மற்றும் கலாச்சார உரிமை

5. கீழ்க்காண்பவற்றில் ஒன்று, அடிப்படை உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதாரணம் இல்லை.
(அ) கர்நாடகாவிலிருந்து, கேரளா பண்ணைகளில் வேலையாட்கள் பணிசெய்தல்
(ஆ)கிறித்துவ சமயக்குழு, தொடர்ச்சியாக, பள்ளிகளை அமைத்தல்
(இ) ஆண், பெண் இருபாலரும் அரசுப்பணிகளுக்கு சம ஊதியம் பெறுதல்
***(ஈ) பெற்றோர்களின் பூர்வீக சொத்துகள் அவர்களது பிள்ளைகளுக்குச் செல்லுதல்***

6. பின்வருவனவற்றுள் எந்த உரிமை டாக்டர். B.R அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' என விவரிக்கப்பட்டது? செப் 2020
(அ) சமய உரிமை
(ஆ)சமத்துவ உரிமை
***(இ)அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை***
(ஈ) சொத்துரிமை

7. அடிப்படை உரிமைகள் எவ்வாறு நிறுத்திவைக்கப்பட முடியும்?
(அ) உச்சநீதி மன்றம் விரும்பினால்
(ஆ)பிரதம மந்திரியின் ஆணையினால்
***(இ)தேசிய அவசரநிலையின் போது குடியரசு தலைவரின் ஆணையினால்***
(ஈ) மேற்கண்ட அனைத்தும்

8. நமது அடிப்படை கடமைகளை ______ இடமிருந்து பெற்றோம்.
(அ) அமெரிக்க அரசியலமைப்பு (ஆ)கனடா அரசியலமைப்பு
***(இ)ரஷ்யா அரசியலமைப்பு*** (ஈ) ஐரிஷ் அரசியலமைப்பு

9. எந்த பிரிவின் கீழ் நிதிநிலை அவசரநிலையை அறிவிக்க முடியும்? மே 2022
(அ) சட்டப்பிரிவு 352 (ஆ)சட்டப்பிரிவு 356 ***(இ)சட்டப்பிரிவு 360*** (ஈ) சட்டப்பிரிவு 368

10. எந்தக் குழுக்கள் / ஆணையங்கள் நடுவண்-மாநில உறவுகள் பற்றி பரிந்துரை செய்தன?
1. சர்க்காரியா குழு 2. ராஜமன்னார் குழு 3. M.N. வெங்கடாசலையா குழு
கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடு
(அ) 1, 2 & 3 ***(ஆ) 1 & 2*** (இ) 1 & 3 (ஈ) 2 & 3

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. முதன் முதலில் அரசியலமைப்பு எனும் கொள்கை ***அமெரிக்க ஐக்கிய நாடு*** ல் தோன்றியது. ஜூன் 2023
2. அரசியல் நிர்ணய சபையின் தற்காலிக தலைவராக ***டாக்டர் சச்சிதானந்த சின்கா*** தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏப்ரல் 2026
3. இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ***1949, நவம்பர் 26***.
4. சட்டப்பிரிவு 32-ல் குறிப்பிடப்பட்டுள்ள நீதி பேராணைகளின் எண்ணிக்கை ***5*** .
5. இந்திய குடிமக்களுக்கு அடிப்படை கடமைகள் ***51A*** பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன. ஏப் 2025

## III. பொருத்துக.

1. குடியுரிமைச் சட்டம் - *1955*
2. முகவுரை - *ஜவகர்லால் நேரு*
3. குறு அரசியலமைப்பு - *42-வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்*
4. செம்மொழி - *தமிழ்*
5. தேசிய அவசரநிலை - *1962*

## IV. குறுகிய விடை தருக.

*1. அரசியலமைப்பு என்றால் என்ன?*

**அரசியலமைப்பு:**
ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதை பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும்.

*2. குடியுரிமை என்பதன் பொருள் என்ன?* ஜூலை 2024

**குடியுரிமை:**
(i) ‘சிட்டிசன்’ எனும் சொல் ‘சிவிஸ்’ எனும் இலத்தின் சொல்லிருந்து பெறப்பட்டதாகும்.
(ii) இதன் பொருள் ஒரு ‘நகர அரசில் வசிப்பர்’ என்பதாகும்.

*3. இந்திய அரசியலமைப்பால் வழங்கப்படும் அடிப்படை உரிமைகளை பட்டியலிடுக.*

ஜூன் 2023

**அடிப்படை உரிமைகள்:**

(i) சமத்துவ உரிமை
(ii) சுதந்திர உரிமை
(iii) சுரண்டலுக்கெதிரான உரிமை
(iv) சமயச்சார்பு உரிமை
(v) கல்வி மற்றும் கலாசார உரிமை
(vi) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை

*4. நீதிப்பேராணை (Writ) என்றால் என்ன?*

**நீதிப் பேராணை:**

(i) நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப் பேராணை எனப்படும்.
(ii) சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடை செய்ய, நீதிமன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.

*5. நடுவண் மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மூன்று தலைப்புகளில் பட்டியலிடுக.*

**மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகள்:**

(i) சட்டமன்ற உறவுகள்
(ii) நிர்வாக உறவுகள்
(iii) நிதி உறவுகள்

*6. செம்மொழித் தகுதிப்பெற்ற இந்திய மொழிகள் எவை?*

ஆக 2022 | ஏப் 2023

**செம்மொழித் தகுதிப்பெற்ற இந்திய மொழிகள்:**

(i) தமிழ்
(ii) சமஸ்கிருதம்
(iii) தெலுங்கு
(iv) கன்னடம்
(v) மலையாளம்
(vi) ஒடியா



*7. தேசிய அவசரநிலை என்றால் என்ன?*

**தேசிய அவசரநிலை:**

(i) போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு அல்லது ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து அல்லது அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால், குடியரசுத்தலைவர் அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 352 இன் கீழ் அவசரநிலையை அறிவிக்கிறார்.

(ii) இது வெளிப்புற அவசர நிலை மற்றும் உள்நாட்டு அவசர நிலை என இருவகைப்படும்.

## V. விரிவான விடை தருக.

**1. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.** செப் 2021 | ஆக 2022 | ஏப் 2023 | ஜூலை 2024 | ஏப் 2025

**இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகள்:**

(i) உலகிலுள்ள எழுதப்பட்ட, அனைத்து அரசியலமைப்புகளை விடவும் மிகவும் நீளமானது.

(ii) இதன் பெரும்பாலான கருத்துகள் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை.

(iii) இது நெகிழாத்தன்மை கொண்டதாகவும், நெகிழும் தன்மை கொண்டதாகவும் உள்ளது.

(iv) கூட்டாட்சி முறை அரசாங்கத்தை (மத்திய, மாநில அரசுகள்) ஏற்படுத்துகிறது.

(v) இந்தியாவைச் சமயச்சார்பற்ற நாடாக்குகிறது.

(vi) சுதந்திரமான நீதித்துறையை வழங்குகிறது.

(vii) உலகளாவிய வயது வந்தோர் வாக்குரிமையை அறிமுகப்படுத்தியதோடு 18 வயது நிரம்பிய குடிமக்கள் அனைவருக்கும் எந்தவிதபாகுபாடுமின்றி வாக்குரிமையை வழங்குகிறது.

**2. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.** ஏப்ரல் 2024 | ஏப்ரல் 2026

**அடிப்படை உரிமைகள்:**

(i) **சமத்துவ உரிமை:**

- பிரிவு 14 : சட்டத்தின் முன் அனைவரும் சமம்
- பிரிவு 15 : மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடம் இவற்றின் அடிப்படையில் பாகுபடுத்துவதைத் தடை செய்தல்.
- பிரிவு 16 : பொது வேலை வாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்
- பிரிவு 17 : தீண்டாமையை ஒழித்தல்
- பிரிவு 18 : இராணுவ மற்றும் கல்விசார் பட்டங்களைத் தவிர மற்ற பட்டங்களை நீக்குதல்.

(ii) **சுதந்திர உரிமை:**

- பிரிவு 19 : பேச்சுரிமை, கருத்து தெரிவிக்கும் உரிமை, அமைதியான முறையில் கூட்டம் கூடுவதற்கு உரிமை, சங்கங்கள் மற்றும் அமைப்புகள் தொடங்க உரிமை, இந்திய நாட்டிற்குள் விரும்பிய இடத்தில் வசிக்கும் உரிமை மற்றும் தொழில் செய்யும் உரிமை.
- பிரிவு 20 : குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கான உரிமை மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- பிரிவு 21 : வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்குப் பாதுகாப்பு பெறும் உரிமை.
- பிரிவு 21A : தொடக்கக் கல்வி பெறும் உரிமை.
- பிரிவு 22 : சில வழக்குகளில் கைது செய்து, தடுப்புக் காவலில் வைப்பதற்கெதிரான பாதுகாப்பு உரிமை.

(iii) **சுரண்டலுக்கெதிரான உரிமை:**

- பிரிவு 23 : கட்டாய வேலை, கொத்தடிமை முறை மற்றும் மனிதத்தன்மையற்ற வியாபாரத்தைத் தடுத்தல்.
- பிரிவு 24 : தொழிற்சாலைகள் மற்றும் ஆபத்தான இடங்களில் குழந்தை தொழிலாளர் முறையைத் தடுத்தல்.

(iv) **சமயச் சார்பு உரிமை:** எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.

- பிரிவு 25 : எந்த ஒரு சமயத்தினை ஏற்கவும், பின்பற்றவும், பரப்பவும் உரிமை.
- பிரிவு 26 : சமய விவகாரங்களை நிர்வகிக்கும் உரிமை.
- பிரிவு 27 : எந்தவொரு மதத்தையும் பரப்புவதற்காக வரி செலுத்துவதற்கெதிரான சுதந்திரம்.
- பிரிவு 28 : மதம் சார்ந்த கல்வி நிறுவனங்களில் நடைபெறும் வழிபாடு மற்றும் அறிவுரை நிகழ்வுகளில் கலந்துகொள்ளாமலிருக்க உரிமை.

(v) **கல்வி, கலாச்சார உரிமை:**

- பிரிவு 29 : சிறுபான்மையினரின் எழுத்து, மொழி மற்றும் கலாச்சாரப் பாதுகாப்பு.
- பிரிவு 30 : சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவி, நிர்வகிக்கும் உரிமை.

(vi) **அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வுகாணும் உரிமை:**

- பிரிவு 32 : தனிப்பட்டவரின், அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும்போது, நீதிமன்றத்தை அணுகி உரிமையைப் பெறுதல்.

***3. அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக.*** ஜூலை 2025

**அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை:**

(i) நீதிமன்ற முத்திரையுடன், நீதிமன்றத்தால் வெளியிடப்படும் கட்டளை அல்லது ஆணை நீதிப் பேராணை எனப்படும்.

(ii) இது சில சட்டங்களை நிறைவேற்றாமல் தடைசெய்ய நீதி மன்றத்தால் வெளியிடப்படும் ஆணையாகும்.

(iii) உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்கள் இரண்டுமே ஐந்து வகையான நீதிப் பேராணைகளை வெளியிடுகின்றன. அவை,

- **ஆட்கொணர்வு நீதிப்பேராணை:** சட்டத்திற்கு புறம்பாக ஒருவர் கைது செய்யப்படுவதிலிருந்து இது பாதுகாக்கிறது.
- **கட்டளையுறுத்தும் நீதிப்பேராணை:** மனுதாரர் சட்ட உதவியுடன் தனது மனுதொடர்பான பணியினைச் சம்மந்தப்பட்ட துறையிலிருந்து நிறைவேற்றிக் கொள்ள முடியும்.
- **தடையுறுத்தும் நீதிப்பேராணை:** ஒரு கீழ்நீதிமன்றம் தனது, சட்ட எல்லையைத் தாண்டி செயல்படுவதைக் தடுக்கிறது.
- **ஆவணக் கேட்பு நீதிப்பேராணை:** உயர்நீதிமன்றம், ஆவணங்களை நியாயமான பரிசீலனைக்கு தனக்கோ அல்லது உரிய அதிகாரிக்கோ அனுப்பச் செய்ய கீழ்நீதி மன்றங்களுக்கு இடும் ஆணை ஆகும்.
- **தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை:** இப்பேராணை சட்டத்திற்குப் புறம்பாக தகாத முறையில் அரசு அலுவலகத்தைக் கைப்பற்றுவதைத் தடை செய்கிறது.

(iv) இது போன்ற ஆணைகளை வெளியிட்டு மக்களின் உரிமைகளைக் காப்பதினால் உச்சநீதிமன்றம் ‘அரசியலமைப்பின் பாதுகாவலன்’ என அழைக்கப்படுகிறது.

(v) Dr.B.R. அம்பேத்கரின் கூற்றுப்படி அரசியலமைப்புப் பிரிவு-32, இந்திய அரசியலமைப்பின் ‘இதயம் மற்றும் ஆன்மா’ ஆகும்.

***4. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.*** மே 2022

| அடிப்படை உரிமைகள் | அரசு கொள்கைக்கான வழிகாட்டும் நெறிமுறைகள் |
|---|---|
| (i) இவை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை. | இவை அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பிலிருந்து பெறப்பட்டவை. |
| (ii) அரசாங்கத்தால் கூட இந்த உரிமையை சுருக்கவோ, நீக்கவோ முடியாது. | இவை அரசுக்கு வெறும் அறிவுறுத்தல்களே ஆகும். |
| (iii) இவற்றை நீதிமன்ற சட்டத்தால் செயற்படுத்த முடியும். | எந்த நீதிமன்றத்தாலும் கட்டாயப்படுத்த முடியாது. |
| (iv) இவை சட்ட ஒப்புதலைப் பெற்றவை. | இவை தார்மீக மற்றும் அரசியல் ஒப்புதலைப் பெற்றவை. |
| (v) இந்த உரிமைகள் நாட்டின் அரசியல் ஜனநாயகத்தை வலுப்படுத்துகின்றன. | இந்த கொள்கைகளை செயற்படுத்தும் பொழுது சமுதாய மற்றும் பொருளாதார ஜனநாயகம் உறுதியாகிறது. |

# குடிமையியல் 2 நடுவண் அரசு

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. நடுவண் அரசின் அரசியலமைப்புத் தலைவர் ______ ஆவார். ஜூலை 2024
(அ)குடியரசுத் தலைவர் (ஆ)தலைமை நீதிபதி
(இ) பிரதம அமைச்சர் (ஈ) அமைச்சர்கள் குழு

2. ஒரு மசோதாவை நிதிமசோதாவா அல்லது இதர மசோதாவா என தீர்மானிக்கும் அதிகாரம் பெற்றவர்
(அ) குடியரசுத் தலைவர் (ஆ)இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
(இ) நாடாளுமன்ற விவகார அமைச்சர் (ஈ) லோக் சபாவின் சபாநாயகர்

3. அமைச்சர்கள் குழு ஒட்டுமொத்தமாக இதற்குப் பொறுப்புடையவர்களாவர்.
(அ) குடியரசுத் தலைவர் (ஆ) மக்களவை
(இ) பிரதம அமைச்சர் (ஈ) மாநிலங்களவை

4. மக்களவை தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது ______.
(அ) 18 வயது (ஆ)21 வயது (இ)25வயது (ஈ) 30 வயது

5. இந்திய மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் அதிகாரம் பெற்றவர் / பெற்ற அமைப்பு.
(அ) குடியரசுத் தலைவர் (ஆ)பிரதம அமைச்சர்
(இ) மாநில அரசாங்கம் (ஈ) நாடாளுமன்றம்

# மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம்

பொருளியல் 1

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. GNP யின் சமம்
(அ) பணவீக்கத்திற்காக சரிசெய்யப்பட்ட NNP
(ஆ)பணவீகத்திற்காக சரிசெய்யப்பட்ட GDP
***(இ)GDP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்***
(ஈ) NNP மற்றும் வெளிநாட்டில் ஈட்டப்பட்ட நிகர சொத்து வருமானம்

2. நாட்டு வருமானம் அளவிடுவது ஜூலை 2025
(அ) பணத்தின் மொத்தமதிப்பு
(ஆ)உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
(இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
***(ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு***

3. முதன்மை துறை இதனை உள்ளடக்கியது ஆக 2022 ஜூன் 2023 ஜூலை 2024 ஏப்ரல் 2026
***(அ)வேளாண்மை*** (ஆ)தானியங்கிகள் (இ) வர்த்தகம் (ஈ) வங்கி

4. ______ முறையில் ஒவ்வொரு இடைநிலை பண்டத்தின் மதிப்பை கூட்டும்போது, இறுதி பண்டத்தின் மதிப்பை கணக்கிடலாம். ஏப் 2025
(அ) செலவு முறை ***(ஆ) மதிப்பு கூட்டு முறை***
(இ) வருமான முறை (ஈ) நாட்டு வருமானம்

5. பணிகள் துறையில் நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதல் 2018 - 19 ல் ______ லட்சம் கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.
(அ) 91.06 ***(ஆ) 92.26*** (இ) 80.07 (ஈ) 98.29

6. வேளாண் பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா ______ அதிகமாக உற்பத்தியாளர் ஆகும்.
(அ) 1வது (ஆ)3வது (இ) 4வது ***(ஈ) 2வது***

7. இந்தியாவில் சராசரி ஆயுட்காலம் ______ ஆண்டுகள் ஆகும்.
***(அ)65*** (ஆ)60 (இ) 70 (ஈ) 55

8. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை?
(அ) நீர்பாசன கொள்கை ***(ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை***
(இ) நில சீர்திருத்தக் கொள்கை (ஈ) கூலிக் கொள்கை

**கூடுதல் வினாக்கள்:**

9. மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பான தவறான கூற்றைக் கண்டறியவும். செப் 2021
(அ) பொருளாதார வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது
(ஆ) பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது
***(இ) பொருட்களின் தரத்தை அளவிடப் பயன்படுகிறது***
(ஈ) வாங்கும் திறனை மதிப்பீடு செய்ய உதவுகிறது

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இந்தியாவில் ***வேளாண்மைத்துறை*** முதன்மை துறையாகும். ஏப்ரல் 2024

2. ***தலா வருமானம்*** மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணர்த்தும் ஒரு கருவியாகும்.

3. இரண்டாம் துறையை வேறுவிதமான ***தொழில்*** துறை என அழைக்கலாம். ஆக 2022 ஏப் 2025

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | மின்சாரம் / எரிவாயு மற்றும் நீர் | - | *தொழில் துறை* |
| 2. | விலைக் கொள்கை | - | *வேளாண்மை* |
| 3. | GST | - | *பண்ட மற்றும் பணிகள் மீதானவரி* |
| 4. | தலா வருமானம் | - | *நாட்டு வருமானம் / மக்கள் தொகை* |
| 5. | $C + I + G + (X - M)$ | - | *மொத்த நாட்டு உற்பத்தி* |

## IV. கீழ்கண்ட விடைகளுக்கு குறுகிய விடையளி.

***1. நாட்டு வருமானம் - வரையறு.***

**நாட்டு வருமானம்:**

(i) நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டின் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.
(ii) பொதுவாக நாட்டு வருமானம் மொத்த நாட்டு உற்பத்தி அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

***2. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்றால் என்ன?*** ஏப் 2023

**மொத்த உள்நாட்டு உற்பத்தி:**

ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

***3. GDPயின் முக்கியத்துவத்தை எழுதுக.*** மே 2022

**GDPயின் முக்கியத்துவம்:**

(i) பொருளாதார வளர்ச்சி பற்றிய ஆய்வு பற்றி அறிந்துகொள்ளப் பயன்படுகிறது.
(ii) பணவீக்கம் மற்றும் பணவாட்டத்தின் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.
(iii) உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.
(iv) வாங்கும் திறன் மதிப்பீடு செய்வதற்கு உதவுகிறது.
(v) பொதுத்துறை பற்றி அனைவரும் தெரிந்துகொள்ள பயன்படுகிறது.
(vi) பொருளாதார திட்டமிட வழிகாட்டியாகவும் பயன்படுகிறது.

*4. தனி நபர் வருமானம் என்றால் என்ன?*

**தனி நபர் வருமானம்:**

(i) நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுத்துக் கிடைப்பது தலா வருமானம் எனப்படும்.

(ii) தலா வருமானம் = $\frac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

*5. மதிப்பு கூட்டுமுறையை எடுத்துக்காட்டுடன் வரையறு.*

**மதிப்பு கூட்டுமுறை:**

(i) உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பை சேர்க்கும் பொழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களில் மொத்த மதிப்பு கிடைக்கிறது. இது மதிப்புக் கூட்டு முறை எனப்படும்.

(ii) எ.கா. டீதூள் + பால் + சர்க்கரை = தேனீர்

இடைநிலை பண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு.

*6. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயர்களை எழுதுக.*

**பொருளாதாரக் கொள்கைகள்:**

(i) வேளாண் கொள்கை

(ii) தொழில்துறைக் கொள்கை

(iii) புதிய பொருளாதார கொள்கை

*7. சிறு குறிப்பு வரைக. (i) மொத்த தேசிய மகிழ்ச்சி(GNH) (ii) மனித மேம்பாட்டுக் குறியீடு(HDI)*

(i) **மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH):**

- GNH என்ற வார்த்தையை 1972இல் உருவாக்கியவர் ஜிகமே சிங்கயே வாங்ஹக் என்ற பூட்டான் அரசர்.
- GNH இன் 4 தூண்கள்: நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி; சுற்றுச்சூழல் பாதுகாப்பு; கலாச்சாரத்தை பாதுகாப்பதும் மேம்படுத்துவதும்; நல்ல ஆட்சித்திறன்.

(ii) **மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI):**

- மனித மேம்பாட்டுக் குறியீடு என்பது 1990ஆம் ஆண்டு பாகிஸ்தான் முகஹப்-உல் ஹக் என்ற பொருளியல் அறிஞரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பிறப்பின்போது வாழ்நாள் எதிர்பார்ப்பு, வயது வந்தோரின் கல்வியறிவு மற்றும் வாழ்க்கைத் தரம், GDP யின் மடக்கை செயல்பாடு என கணக்கிடப்பட்டு, வாங்கும் சக்தி சமநிலைக்கு (PPP) சரி செய்யப்படுகிறது.

## V. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விரிவான விடையளி.

*1. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துகளை விவரி?*

**நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய கருத்துகள்:** செப் 2021 ஜூலை 2024 ஏப் 2025

(i) **மொத்த நாட்டு உற்பத்தி (GNP):**

- மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

- GMP = C + I + G + (X – M) + NFIA

  C - நுகர்வோர்

  I - முதலீட்டாளர்

  G - அரசு செலவுகள்

  X – M - ஏற்றுமதி – இறக்குமதி

  NFIA - வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்.

(ii) **<u>மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP):</u>** ஒரு ஆண்டின் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்திக் காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள்) மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

(iii) **<u>நிகர நாட்டு உற்பத்தி (NNP):</u>**

- மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.
- நிகரநாட்டு உற்பத்தி (NNP) = மொத்த உற்பத்தி (GNP) – தேய்மானம்.

(iv) **<u>நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP):</u>**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து தேய்மானத்தைக் (தேய்மான செலவின் அளவு) கழித்து பின் கிடைப்பது நிகர உள்நாட்டு உற்பத்தியாகும்.
- நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) = மொத்த உற்பத்தி (GDP) – தேய்மானம்.

(v) **<u>தலா வருமானம் அல்லது தனி நபர் வருமானம் (PCI):</u>**

- நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுத்துக் கிடைப்பது தலா வருமானம் எனப்படும்.
- $\text{தலா வருமானம்} = \dfrac{\text{நாட்டு வருமானம்}}{\text{மக்கள் தொகை}}$

(vi) **<u>தனிப்பட்ட வருமானம் (PI):</u>**

- நேர்முக வரிவிதிப்பிற்கு முன் தனி நபர்கள் மற்றும் ஒருநாட்டின் குடும்பங்களின் மூலம் அனைத்து ஆதாரங்களிலிருந்து பெறப்படுகின்ற மொத்தப் பண வருமானத்தை தனிப்பட்ட வருமானம் எனலாம்.

(vii) **<u>செலவிடத் தகுதியான வருமானம் (DI):</u>**

- தனி நபர்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான வருமானத்தில் நுகர்வுக்கு செலவிடப்படுகின்ற வருமானம் செலவிடத் தகுதியான வருமானம் எனப்படுகிறது.
- DPI = தனிப்பட்ட வருமானம் – நேர்முகவரி (நுகர்வு முறையில் DI = நுகர்வுச் செலவு + சேமிப்பு)

**2. *மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி?***

| ஆக 2022 | ஏப்ரல் 2024 | ஜூலை 2025 | ஏப்ரல் 2026 |
|---|---|---|---|

**<u>GDPஐ கணக்கிடும் முறைகள்:</u>**

(i) **<u>செலவின முறை:</u>**

இந்த முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்த அனைத்து இறுதிப் பண்ட பணிகளுக்கு மேற்கொள்ளும் செலவுகளின் கூட்டுத் தொகையேயாகும். $Y = C + I + G + (X - M)$

(ii) **<u>வருமான முறை:</u>**

பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்களின் வருமானத்தைக் கணக்கிட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியை இந்தமுறை கூறுகிறது. வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்

(iii) **மதிப்புக் கூட்டு முறை:**

உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட அனைத்து இடைநிலைப் பண்டங்களின் மதிப்பைச் சேர்க்கும் போழுது, பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பண்டங்களின் மொத்த மதிப்பு கிடைக்கிறது.

**எ.கா:**

டீதூள் + பால் + சர்க்கரை = தேனீர்

இடைநிலைபண்டங்களின் மொத்த மதிப்பு = இறுதிப் பண்டத்தின் மொத்த மதிப்பு

***3. பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் இடையேயுள்ள ஏதேனும் ஐந்து வேறுபாடுகளைக் கூறுக.***

| | பொருளாதார வளர்ச்சி | பொருளாதாரமுன்னேற்றம் |
|---|---|---|
| 1. கருத்து | இது ஒரு குறுகிய கருத்து | இது ஒரு பரந்த கருத்து |
| 2. வரையறை/ பொருள் | ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பொருளாதாரத்தில் வெளியீட்டில் இது நேர்மறை அளவு மாற்றத்தைக் கொடுக்கும் | இது பொருளாதாரத்தில் வெளியீட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, HDI-யின் குறியீட்டின் முன்னேற்றம் வாழ்க்கைத் தரத்தில் உயர்வு, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் ஒரு நாட்டின் ஒட்டு மொத்த மகிழ்ச்சிக் குறியீட்டைக் குறிக்கிறது. |
| 3. அணுகுமுறை இயல்பு | அளவின் இயல்பு | தரத்தின் இயல்பு |
| 4. நோக்கம் | GDP, GNP, FDI, FII போன்ற அளவுகள் அதிகரிக்கும் | வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம் குழந்தை எழுத்தறிவு விகிதம் மற்றும் வறுமை விகிதத்தில் முன்னேற்றம். |
| 5. கால வரம்பு | இயற்கையில் குறுகிய காலத்தை உடையது | இயற்கையில் நீண்ட காலத்தை உடையது. |
| 6. பொருந்தும் தன்மை | வளர்ந்த நாடுகள் | வளர்ந்து வருகின்ற நாடுகள் |
| 7. அளவீட்டு நுட்பங்கள் | நாட்டு வருமானத்தை அதிகரித்தல் | உண்மையான நாட்டு வருமானத்தை அதிகரித்தல். அதாவது, தனிநபர் வருமானம் போன்றவை |
| 8. நிகழ்வின் அதிர்வெண் | ஒரு குறிப்பிட்ட காலம் | தொடர்ச்சியான செயல்முறை |
| 9. அரசாங்க உதவி | இது ஒரு தானியங்கி செயல் -முறையாகும். எனவே, அரசாங்க உதவி /ஆதரவு அல்லது தலையீடு தேவைப்படாது | அரசாங்க தலையீட்டை மிகவும் நம்பியுள்ளது. இது பரந்த கொள்கை மாற்றங்களை உள்ளடக்கியுள்ளது. எனவே, அரசாங்கத் தலையீடு இல்லாமல் அது சாத்தியமே இல்லை. |

***4. கீழ்க்காணும் பொருளாதார கொள்கைகளை விவரி?***
***(i) வேளாண் கொள்கை (ii) தொழிற் கொள்கை (iii) புதிய பொருளாதார கொள்கை***

**வேளாண் கொள்கை:**

(i) வேளாண் கொள்கை என்பது உள்நாட்டு வேளாண்மை மற்றும் வெளிநாட்டு வேளாண்மை இறக்குமதிப் பொருட்கள் பற்றிய அரசின் முடிவுகளையும் பற்றியது ஆகும்.

(ii) சில பரவலான கருப்பொருட்கள், இடர் மேலாண்மை மற்றும் சரி செய்தல், பொருளாதார நிலைத் தன்மை, இயற்கை வளங்கள், சுற்றுச்சூழல் நிலைத்தன்மையின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உள்நாட்டு பொருள்களுக்கான சந்தை அணுகல் ஆகியவை வேளாண் கொள்கையில் அடங்கும்.

(iii) விலைக் கொள்கை, விவசாய தொழிலாளர் கொள்கை மற்றும் கூட்டுறவு கொள்கை நிலசீர்திருத்தக் கொள்கை, பசுமைப்புரட்சி, பாசனக் கொள்கை, உணவுக் கொள்கை, விவசாய தொழிலாளர் கொள்கை மற்றும் கூட்டுறவு கொள்கை ஆகியவை முக்கிய வேளாண் கொள்கைகள் ஆகும்.

**தொழில் கொள்கை:**

(i) தொழில் துறை முன்னேற்றம் எந்த ஒரு பொருளாதாரத்திற்கும் முக்கியமான அம்சமாகும். இது வேலைவாய்ப்பை உருவாக்குகிறது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கிறது.

(ii) இதனால் நவீனமயமாக்கலுக்கு வழி வகுக்கப்பட்டு இறுதியில் பொருளாதாரம் தன்னிறைவு அடைகிறது.

(iii) இது பொருளாதார வர்த்தக வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

(iv) எ.கா. ஜவுளித் தொழில் கொள்கை, சர்க்கரைத் தொழில் கொள்கை, தொழில் துறை வளர்ச்சி விலைக் கொள்கை, சிறுதொழில் கொள்கை மற்றும் தொழில்துறை தொழிலாளர் கொள்கை.

**புதிய பொருளாதாரக் கொள்கை:**

(i) 1990களின் ஆரம்பத்தில் இந்தியாவின் பொருளாதாரம் கணிசமான கொள்கை மாற்றங்களுக்கு உட்பட்டது.

(ii) இந்த புதிய பொருளாதார சீர்திருத்தம் பொதுவாக, LPG அல்லது தாராளமயமாக்கல், தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் மாதிரி என அழைக்கப்படுகிறது.

(iii) இந்த பொருளாதார சீர்த்திருத்தங்கள், நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை ஒரு குறிப்பிடத் தக்க வகையில் முன்னேற்றமடையச் செய்தது.

**கூடுதல் வினாக்கள்:**

***5. இந்தியாவில் GDPயில் பல்வேறு துறைகளின் பங்கினை விவரி.*** செப் 2020

**இந்தியாவில் GDPயில் பல்வேறு துறைகளின் பங்கு:**

**முதன்மைத் துறை (விவசாயத் துறை):**

(i) வேளாண்மைத் துறையை முதன்மைத் துறை எனவும் அழைக்கலாம். இதில் வேளாண் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் அடங்கும்.

(ii) எ.கா. கால்நடை பண்ணைகள், மீன் பிடித்தல், சுரங்கங்கள், காடுகள் வளர்த்தல், சோளம், நிலக்கரி போன்ற மூலப்பொருட்கள் உற்பத்தி செய்தல்.

**இரண்டாம் துறை (தொழில் துறை):**

(i) தொழில்துறையை இரண்டாம் துறை எனவும் அழைக்கலாம். மூலப்பொருட்களை மாற்றியமைப்பதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

(ii) எ.கா. இரும்பு மற்றும் எஃகுத்தொழில், ஜவுளித் தொழில், சணல், சர்க்கரை, சிமெண்ட், காகிதம், பெட்ரோலியம், ஆட்டோமொபைல்ஸ் போன்ற தொழில்கள்.

**மூன்றாம் துறை (பணிகள் துறை):**

(i) பணிகள் துறையை மூன்றாம் துறை எனவும் அழைக்கலாம்.

(ii) எ.கா. அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, தகவல் தொடர்பு, வர்த்தகம், தபால் மற்றும் தந்தி, வங்கி, கல்வி. பொழுதுபோக்கு, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் போன்ற தொழில்கள்.

# உலகமயமாதல் மற்றும் வர்த்தகம்

பொருளியல் 2

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. உலக வர்த்தக அமைப்பின் (WTO) தலைவர் யார்? ஜூலை 2025
(அ) அமைச்சரவை *(ஆ) <u>தலைமை இயக்குநர்</u>*
(இ) துணை தலைமை இயக்குநர் (ஈ) இவற்றில் எதுவுமில்லை

2. இந்தியாவில் காலனியாதிக்க வருகை
*(அ)<u>போர்ச்சுக்கீசியர், டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு</u>*
(ஆ)டச்சு, ஆங்கிலேயர், டேனிஷ், பிரெஞ்சு
(இ) போர்ச்சுகீசியர், டேனிஷ், டச்சு, பிரெஞ்சு, ஆங்கிலேயர்
(ஈ) டேனிஷ், போர்ச்சுகீசியர், பிரெஞ்சு, ஆங்கிலேயர், டச்சு

3. காட்(GATT)-இன் முதல் சுற்று நடைபெற்ற இடம் ஏப்ரல் 2024
(அ) டோக்கியோ (ஆ)உருகுவே (இ) டார்குவே *(ஈ) <u>ஜெனீவா</u>*

4. இந்தியா எப்போது டங்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது? ஏப் 2025
(அ) 1984 (ஆ)1976 (இ) 1950 *(ஈ) <u>1994</u>*

5. 1632இல் ஆங்கிலேயர்களுக்கு “கோல்டன் ஃபயர்மான்” வழங்கியவர் யார்? ஜூன் 2023 ஏப்ரல் 2026
(அ) ஜஹாங்கீர் *(ஆ) <u>கோல்கொண்டா சுல்தான்</u>*
(இ) அக்பர் (ஈ) ஔரங்கசீப்

6. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை (FIP)அறிவித்த ஆண்டு
(அ) ஜுன் 1991 (ஆ)ஜுலை 1991
*(இ)<u>ஜுலை-ஆகஸ்ட் 1991</u>* (ஈ) ஆகஸ்ட் 1991

**<u>கூடுதல் வினாக்கள்:</u>**

7. இந்திய அரசாங்கத்தால் 1991இல் ______ ஐ அறிமுகப்படுத்தப்பட்டது. மே 2022
(அ) உலகமயமாக்கல் (ஆ)உலகவர்த்த அமைப்பு
*(இ)<u>புதிய பொருளாதார கொள்கை</u>* (ஈ) இவற்றில் எதுவுமில்லை

8. அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு செப் 2021
*(அ)<u>1999</u>* (ஆ)2019 (இ) 1992 (ஈ) 2005

## II. கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. ஒரு நல்ல பொருளாதாரம் *<u>மூலதன சந்தை</u>*யின் விரைவான வளர்ச்சிக்காக அறிமுகப்படுத்தப்படுகிறது. செப் 2020

# வினாஎண் : 41 - காலக்கோடு (5 மதிப்பெண்கள்)

***கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.***

*1. 1910 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.* ஏப் 2023 ஜூலை 2025




*பயிற்சிக்காக:*

*2. 1910 முதல் 1940 வரையிலான இந்திய தேசிய இயக்க வரலாற்றின் முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.* செப் 2021 ஏப் 2025

*3. 1920 முதல் 1940 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.* செப் 2020 மே 2022 ஏப்ரல் 2024

*4. 1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் காலக்கோட்டில் எழுதுக.* ஆக 2022 ஜூன் 2023 ஜூலை 2024

*5. 1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட முக்கிய வரலாற்று நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.* ஏப்ரல் 2026

## இந்திய தேசிய இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகள் (1900 - 1947)

அளவுத்திட்டம்
1 அலகு = 10 ஆண்டுகள்

1900

1905 வங்கப்பிரிவினை / சுதேசி இயக்கம்
1906 சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் தொடங்கப்பட்டது

1910

1916 தன்னாட்சி இயக்கம்/லக்னோ ஒப்பந்தம்
1917 சம்பரான் சத்தியாகிரகம்
1918 கேதா சத்தியாகிரகம்
1919 ரௌலட் சட்டம்/ஜாலியன்வாலா பாக் படுகொலை

1920

1920 கிலாபத் இயக்கம்/ஒத்துழையாமை இயக்கம்
1922 சௌரி சௌரா சம்பவம்
1923 சுயாராஜ்ஜியக் கட்சியின் தோற்றம்
1927 சைமன் குழு நியமனம்
1928 மோதிலால் நேரு அறிக்கை
1929 லாகூர் காங்கிரஸ் மாநாடு

1930

1930 உப்புச்சத்தியாகிரகம்/முதல் வட்டமேசை மாநாடு
1931 காந்தி-இர்வின் ஒப்பந்தம்/இரண்டாவது வட்டமேசை மாநாடு
1932 வகுப்புவாரி பிரநிதித்துவம்/பூனா ஒப்பந்தம்/மூன்றாவது வட்டமேசை மாநாடு
1935 இந்திய அரசு சட்டம்
1937 மாகாணங்களில் முதலாவது காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்படுதல்

1940

1940 ஆகஸ்ட் நன்கொடை/தனிநபர் சத்தியாகிரகம்
1942 கிரிப்ஸ் தூதுக்குழு/வெள்ளையனே வெளியேறு இயக்கம்
1945 வேவல் திட்டம்/சிம்லா மாநாடு
1946 ராயல் இந்திய கப்பற்படை புரட்சி/அமைச்சரவை தூதுக்குழு வருகை/இடைக்கால அரசு
1947 மௌண்ட்பேட்டன் திட்டம்/இந்தியா விடுதலை பெறுதல்

1950

## உலக வரலாற்றில் முக்கிய நிகழ்வுகள் (1900 - 1950)

அளவுத்திட்டம்

1 அலகு = 10 ஆண்டுகள்

1900

1910

- 1910 தென்னாப்பிரிக்க ஒன்றியம் உதயமாதல்
- 1912 முதல் பால்கன் போர்
- 1914 முதல் உலகப்போர் தொடக்கம்
- 1917 ரஷ்யப் புரட்சி
- 1918 முதல் உலகப்போர் முடிவு
- 1919 பாரிஸ் அமைதி மாநாடு/வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை

1920

- 1920 பன்னாட்டு சங்கம் தோற்றம்
- 1922 முசோலினியின் ரோமாபுரி அணிவகுப்பு
- 1927 வியட்நாம் தேசியக்கட்சி உதயம்
- 1929 பொருளாதாரப் பெருமந்தம்/லேட்டரன் உடன்படிக்கை

1930

- 1933 ஹிட்லர் ஜெர்மனியின் சான்சிலர் (முக்கிய அமைச்சர்) ஆதல்
- 1934 நீண்ட பயணம்
- 1935 முசோலினி எத்தியோப்பியாவின் மீது படையெடுத்தது
- 1938 மியூனிச் உடன்படிக்கை
- 1939 இரண்டாம் உலகப்போர் தொடக்கம்

1940

- 1940 பிரிட்டன் போர்
- 1941 முத்துத் துறைமுக நிகழ்வு
- 1942 ஸ்டாலின்கிரேடு போர்
- 1945 இரண்டாம் உலகப்போர் முடிவு/ஐக்கிய நாடுகள் சபை தோற்றம்

1950

# வினாஎண் : 42 - வரலாறு வரைபடம் (5 மதிப்பெண்கள்)

## அரசுப் பொதுத்தேர்வு வினாக்கள்

| வரிசை எண் | வினா விவரம் | வினா இடம்பெற்ற தேர்வு | பார்க்க வரைபடம் எண் |
|---|---|---|---|

## இந்தியா

*இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.*

| வரிசை எண் | வினா விவரம் | வினா இடம்பெற்ற தேர்வு | பார்க்க வரைபடம் எண் |
|---|---|---|---|
| 1. | அமிர்தசரஸ் (ஜாலியன் வாலாபாக்) | செப் 2021 \| ஜூன் 2023 | 1 |
| 2. | தண்டி | செப் 2020 \| ஆக 2022 \| ஜூன் 2023 | 1 |
| 3. | பம்பாய் | செப் 2021 \| ஆக 2022 | 1 |
| 4. | வேதாரண்யம் | செப் 2020 \| செப் 2021 | 1 |
| 5. | மதராஸ் (சென்னை) | செப் 2021 \| ஜூன் 2023 | 1 |
| 6. | கல்கத்தா | ஆக 2022 | 1 |
| 7. | பாரக்பூர் | செப் 2020 \| மே 2022 \| ஜூன் 2023 | 1 |
| 8. | சௌரி சௌரா | செப் 2020 \| ஆக 2022 | 1 |
| 9. | மீரட் | செப் 2020 \| ஆக 2022 \| ஜூன் 2023 | 1 |
| 10. | தில்லி | மே 2022 | 1 |
| 11. | குவாலியர் | மே 2022 | 1 |
| 12. | ஜான்சி | செப் 2021 \| மே 2022 | 1 |
| 13. | பனாரஸ் | மே 2022 | 1 |

## உலகம்

*உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.*

| வரிசை எண் | வினா விவரம் | வினா இடம்பெற்ற தேர்வு | பார்க்க வரைபடம் எண் |
|---|---|---|---|
| 1. | கிரேட் பிரிட்டன் | ஏப் 2023 \| ஜூலை 2025 | 2 |
| 2. | பிரான்ஸ் | ஏப் 2023 \| ஜூலை 2024 \| ஏப் 2025 | 2 |
| 3. | இத்தாலி | ஏப் 2023 \| ஏப் 2025 | 2 |
| 4. | ஜெர்மனி | ஏப் 2023 \| ஜூலை 2025 \| ஏப்ரல் 2026 | 2 |
| 5. | மொரக்கோ | ஏப் 2023 \| ஜூலை 2024 \| ஜூலை 2025 \| ஏப்ரல் 2026 | 2 |
| 6. | கிரீஸ் | ஏப்ரல் 2024 \| ஜூலை 2025 | 2 |
| 7. | துருக்கி | ஏப்ரல் 2024 | 2 |
| 8. | ஹிரோஷிமா | ஏப்ரல் 2024 \| ஏப்ரல் 2026 | 4 |
| 9. | மாஸ்கோ | ஏப்ரல் 2024 | 4 |
| 10. | சான்பிரான்சிஸ்கோ | ஏப்ரல் 2024 \| ஏப்ரல் 2026 | 3 |
| 11. | பசிபிக் பெருங்கடல் | ஏப் 2025 | |
| 12. | செர்பியா | ஏப் 2025 | 2 |
| 13. | ஜப்பான் | ஜூலை 2024 \| ஏப் 2025 | 3 |
| 14. | ரஷ்யா | ஜூலை 2024 \| ஏப்ரல் 2026 | 3 |
| 15. | இங்கிலாந்து | ஜூலை 2024 | |
| 16. | நாகசாகி | ஜூலை 2025 | 4 |

# இந்தியா - முக்கியமான நகரங்கள்

1




குறிப்பு: வரைபடம் அளவையில் இல்லை

# வினாஎண் : 44 (அ) - புவியியல் வரைபடம் (8 மதிப்பெண்கள்)

## அரசுப் பொதுத்தேர்வு வினாக்கள்

*கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.*

| வரிசை எண் | வினா விவரம் | வினா இடம்பெற்ற தேர்வு | பார்க்க வரைபடம் எண் |
|---|---|---|---|
| 1. | காரகோரம் மலைத்தொடர் | மே 2022, ஏப்ரல் 2024 | 5 |
| 2. | ஆரவல்லி மலைத்தொடர் | செப் 2021, ஏப் 2023, ஜூலை 2025 | 5 |
| 3. | மேற்கு தொடர்ச்சி மலை | மே 2022, ஏப் 2023, ஏப் 2025 | 5 |
| 4. | கிழக்குத் தொடர்ச்சி மலை | ஜூன் 2023, ஏப்ரல் 2026 | 5 |
| 5. | K2 சிகரம் | செப் 2020, ஜூன் 2023 | 5 |
| 6. | எவரெஸ்ட் சிகரம் | ஆக 2022, ஏப்ரல் 2026 | 5 |
| 7. | சோழ மண்டல கடற்கரை | செப் 2020 | 6 |
| 8. | மலபார் கடற்கரை | செப் 2021, ஆக 2022 | 6 |
| 9. | கட்ச் வளைகுடா | செப் 2020 | 6 |
| 10. | ராண் ஆப் கச் | ஜூன் 2023 | 6 |
| 11. | காம்பே வளைகுடா | ஆக 2022 | 6 |
| 12. | மன்னார் வளைகுடா | ஜூன் 2023 | 6 |
| 13. | பாக்நீர்சந்தி | செப் 2020, மே 2022 | 6 |
| 14. | தக்காண பீடபூமி | செப் 2021, ஏப் 2023, ஜூலை 2024, ஏப் 2025 | 6 |
| 15. | சோட்டா நாகபுரி பீடபூமி | ஏப்ரல் 2024 | 6 |
| 16. | மாளவ பீடபூமி | ஜூலை 2025, ஏப்ரல் 2026 | *6* |
| 17. | தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை | செப் 2021, மே 2022, ஜூலை 2024, ஜூலை 2025 | 7 |
| 18. | வடகிழக்கு பருவக்காற்று வீசும் திசை | ஆக 2022, ஜூன் 2023 | 8 |
| 19. | வண்டல் மண் பகுதி | செப் 2021, மே 2022, ஜூலை 2025 | 9 |
| 20. | கரிசல் மண் பகுதி | செப் 2020, ஏப் 2023, ஏப் 2025 | 9 |
| 21. | பாலை மண் | ஏப்ரல் 2024 | 9 |
| 22. | நெல் விளையும் பகுதி | மே 2022 | 9 |
| 23. | தேயிலை விளையும் பகுதி ஒன்று | ஆக 2022, ஜூலை 2025, ஏப்ரல் 2026 | 9 |

24. பருத்தி விளையும் பகுதி ........ ஏப்ரல் 2024 ஜூலை 2024 ......... 9
25. மலைக்காடுகள் ........ மே 2022 ஏப்ரல் 2024 ஜூலை 2024 ஏப்ரல் 2026 ...... 10
26. மாங்குரோவ் காடுகள் ........ ஜூன் 2023 ........ 10
27. தார் பாலைவனம் ........ ஆக 2022 ஏப் 2023 ஜூலை 2024 ...... 10
28. அதிக மழைபெறும் பகுதி ........ செப் 2021 ஏப்ரல் 2024 ........ 10
29. மக்களடர்த்தி மிகுந்த இந்திய மாநிலம் ........ செப் 2021 ........ 11
30. நெய்வேலி ........ செப் 2020 ........ 12
31. மும்பை ஹை ........ செப் 2020 ........ 12
32. நிலக்கரி கிடைக்கும் இடம் ........ செப் 2021 ஆக 2022 ........ 12
33. கங்கை ஆறு ........ மே 2022 ஜூன் 2023 ஏப் 2025 ...... 13
34. கோதாவரி ஆறு ........ ஏப்ரல் 2026 ...... 13
35. நர்மதை ........ ஏப் 2023 ஜூலை 2025 ........ 13
36. மேட்டூர் அணை ........ ஜூன் 2023 ஏப் 2025 ........ 14
37. ஹிராகுட் அணை ........ ஏப்ரல் 2024 ........ 14
38. பன்னா உயிர்கோள பெட்டகம் ........ ஏப் 2023 ஏப் 2025 ........ 15
39. அகத்தியர் மலை உயிர்கோளப் பெட்டகம் ........ ஏப்ரல் 2024 ஏப்ரல் 2026 ........ 15
40. கொச்சி ........ ஆக 2022 ........ 18
41. பாரதீப் ........ ஏப் 2023 ........ 18
42. சென்னை - கொல்கத்தா இருப்புப் பாதை ........ செப் 2020 ........ 21
43. பன்னாட்டு விமான நிலையம் (ஏதேனும் ஒன்று) ........ ஜூலை 2024 ஏப் 2025 ...... 19
44. பெட்ரோலியம் கிடைக்குமிடம் ........ ஏப் 2025 ...... 12
45. இரும்பு, எஃகு தொழிலகங்கள் ........ ஜூலை 2025 ...... 12
46. அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள் ........ ஜூலை 2024 ஏப்ரல் 2026 ........ 6
47. இலட்சத் தீவுகள் ........ ஜூலை 2025 ........ 6
48. இந்தியாவின் அதிக கல்வியறிவு பெற்ற மாநிலம் ........ ஜூலை 2024 ...... 11

5

வரைபடங்கள்

## இந்தியா - மலைத்தொடர்கள் ( ▬ ) மற்றும் சிகரங்கள் ( △ )




குறிப்பு: வரைபடம் அளவையில் இல்லை

# வினாஎண் : 44 (ஆ) - புவியியல் வரைபடம் (8 மதிப்பெண்கள்)

## அரசுப் பொதுத்தேர்வு வினாக்கள்

*கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.*

| வரிசை எண் | வினா விவரம் | வினா இடம்பெற்ற தேர்வு | பார்க்க வரைபடம் எண் |
|---|---|---|---|
| 1. | சென்னை | செப் 2020, மே 2022, ஜூன் 2023, ஏப்ரல் 2024, ஜூலை 2024, ஏப்ரல் 2026 | 22 |
| 2. | காஞ்சிபுரம் | செப் 2021 | 22 |
| 3. | சேலம் | செப் 2020, மே 2022 | 22 |
| 4. | கோயம்பத்தூர் | செப் 2021 | 22 |
| 5. | கன்னியாகுமரி | செப் 2020, ஆக 2022, ஏப்ரல் 2026 | 22 |
| 6. | நாகப்பட்டினம் | செப் 2021 | 22 |
| 7. | தஞ்சாவூர் | ஆக 2022 | 22 |
| 8. | வேடந்தாங்கல் | ஏப் 2023, ஜூன் 2023 | 22 |
| 9. | வேதாரண்யம் | ஜூன் 2023 | |
| 10. | நெய்வேலி | ஜூலை 2025 | 27 |
| 11. | கேரளா | ஏப்ரல் 2024 | 22 |
| 12. | காவிரி ஆறு | செப் 2020, மே 2022, ஜூலை 2024, ஏப் 2025 | 23 |
| 13. | வைகை ஆறு | செப் 2021, ஏப்ரல் 2024, ஜூலை 2025, ஏப்ரல் 2026 | 23 |
| 14. | பாலாறு | ஏப் 2023 | 23 |
| 15. | மேட்டூர் அணை | செப் 2021 | 23 |
| 16. | வைகை அணை | ஆக 2022 | 23 |
| 17. | முல்லை பெரியார் அணை | ஏப் 2023 | 23 |
| 18. | மணிமுத்தாறு அணை | ஏப்ரல் 2026 | 27 |
| 19. | மன்னார் வளைகுடா | செப் 2020, மே 2022, ஏப்ரல் 2024, ஜூலை 2024 | 23 |
| 20. | வங்காள விரிகுடா | செப் 2020, மே 2022, ஜூலை 2024 | 23 |
| 21. | இந்தியப் பெருங்கடல் | ஏப் 2023, ஏப் 2025 | 23 |
| 22. | சோழமண்டல கடற்கரை | ஜூன் 2023, ஏப்ரல் 2024, ஜூலை 2025 | 24 |
| 23. | நீலகிரி | மே 2022, ஜூன் 2023, ஜூலை 2024, ஏப் 2025 | 24 |
| 24. | ஆனை மலை | செப் 2021 | 24 |
| 25. | அகத்தியர் மலை | செப் 2020, ஜூன் 2023 | 24 |

26. சேர்வராயன் மலை ........ ஆக 2022 ஜூலை 2025 ....... 24
27. மேற்கு தொடர்ச்சி மலைகள் ........ செப் 2021 ........ 24
28. தொட்டபெட்டா ........ செப் 2020 ........ 24
29. மாங்குரோவ் காடுகள் ........ ஆக 2022 ........ 24
30. விமான நிலையம் (ஏதேனும் ஒன்று) ........ ஏப் 2023 ஏப் 2025 ........ 25
31. எண்ணூர் துறைமுகம் ........ ஆக 2022 ஏப் 2023 ........ 26
32. துறைமுகம் (ஏதேனும் ஒன்று) ........ ஏப்ரல் 2024 ஜூலை 2025 ........ 26
33. கரும்பு விளையும் பகுதி ஒன்று ........ செப் 2021 ஏப் 2025 ....... 27
34. நெல் விளையும் பகுதி ஒன்று ........ மே 2022 ஜூன் 2023 ஜூலை 2025 ஏப்ரல் 2026 ....... 27
35. காப்பி விளையும் பகுதி ஒன்று ........ ஆக 2022 ஏப் 2023 ஜூலை 2024 ....... 27
36. தேயிலை விளையும் பகுதி ........ ஏப்ரல் 2024
37. பறவைகள் சரணாலயம் ஒன்று ........ மே 2022 ஜூலை 2025 ....... 27
38. முதுமலை வனவிலங்கு சரணாலயம் ........ ஏப்ரல் 2026 ........ 27
39. வாகனத் தொழிலகங்கள் ஒன்று ........ ஆக 2022 ........ 27
40. பட்டு தொழில் நடைபெறும் இடம் ஒன்று ........ ஏப் 2023 ........ 27
41. காகித தொழிலகம் (ஏதேனும் ஒன்று) ........ ஏப்ரல் 2024 ஏப்ரல் 2026
42. பாக் ஜலசந்தி ........ ஜூன் 2023 ஜூலை 2025 ஏப்ரல் 2026
43. கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் ........ ஜூலை 2024 ஏப் 2025
44. பழவேற்காடு ஏரி ........ ஏப் 2025
45. நிலக்கரி கிடைக்குமிடம் (ஏதேனும் ஒன்று) ........ ஏப் 2025

22

## தமிழ்நாடு - முக்கிய நகரங்கள்




குறிப்பு: வரைபடம் அளவையில் இல்லை

# பத்தாம் வகுப்பு : அரசுப் பொதுத்தேர்வு வினாத்தாள் : ஏப்ரல்–2026

காலஅளவு : 3.00 மணி நேரம்] **சமூக அறிவியல்** [மொத்த மதிப்பெண்கள் : 100

## பகுதி-I

குறிப்பு: (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். $14 \times 1 = 14$

(ii) கொடுக்கப்பட்ட **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம்" எனக் கூறியவர் யார் ?
(அ) லெனின் (ஆ) மார்க்ஸ் (இ) சன் யாட் சென் (ஈ) மா சே துங்

2. யாருடைய ஆக்கிரமிப்பின் போது மெக்சிகோ நாகரிகம் நிலைகுலைந்து போயிற்று ?
(அ) ஹெர்னன் கோர்ட்ஸ் (ஆ) பிரான்சிஸ்கோ பிசாரோ
(இ) தௌசெயின்ட் லாவெர்ட்யூர் (ஈ) முதலாம் பெட்ரோ

3. எந்த ஆண்டு வார்சா ஒப்பந்தம் கலைக்கப்பட்டது ?
(அ) 1979 (ஆ) 1989 (இ) 1990 (ஈ) 1991

4. "சத்யார்த்தபிரகாஷ்" எனும் நூலின் ஆசிரியர் யார் ?
(அ) தயானந்த சரஸ்வதி (ஆ) அயோத்தி தாசர்
(இ) அன்னிபெசன்ட் (ஈ) நாராயண குரு

5. கீழ்க்காண்போரில் தீவிர தேசியவாதி யார் ?
(அ) தாதாபாய் நௌரோஜி (ஆ) நீதிபதி கோவிந்த் ரானடே
(இ) பிபின் சந்திர பால் (ஈ) ரொமேஷ் சந்திரா

6. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ______ .
(அ) தமிழ்நாடு (ஆ) கேரளா (இ) பஞ்சாப் (ஈ) மத்தியப் பிரதேசம்

7. ஆறுகளின் மூலம் உருவாகும் மண்
(அ) செம்மண் (ஆ) கரிசல் மண் (இ) பாலை மண் (ஈ) வண்டல் மண்

8. மிக அதிகமாகக் கிடைக்கக்கூடிய ஆற்றல் வளம்
(அ) உயிரி சக்தி (ஆ) சூரியன் (இ) நிலக்கரி (ஈ) எண்ணெய்

9. இந்தியாவின் முக்கிய இறக்குமதி பொருள்
(அ) சிமெண்ட் (ஆ) ஆபரணங்கள் (இ) தேயிலை (ஈ) பெட்ரோலியம்

10. தமிழ்நாட்டிலுள்ள பெரிய மற்றும் சிறிய துறைமுகங்களின் எண்ணிக்கை
(அ) 3 மற்றும் 15 (ஆ) 4 மற்றும் 16 (இ) 3 மற்றும் 16 (ஈ) 4 மற்றும் 15

11. மாநில ஆளுநரை நியமிப்பவர்
(அ) பிரதமர் (ஆ) முதலமைச்சர்
(இ) குடியரசுத் தலைவர் (ஈ) தலைமை நீதிபதி

12. எத்தனை மாநிலங்கள் நேபாளத்துடன் தங்கள் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன ?
(அ) ஐந்து (ஆ) நான்கு (இ) மூன்று (ஈ) இரண்டு

13. முதன்மைத் துறை இதனை உள்ளடக்கியது
(அ) வேளாண்மை (ஆ) தானியங்கிகள்
(இ) வர்த்தகம் (ஈ) வங்கி

14. 1632–இல் ஆங்கிலேயர்களுக்கு "கோல்டன் ஃபயர்மேன்" வழங்கியவர் யார் ?
(அ) ஜஹாங்கீர் (ஆ) கோல்கொண்டா சுல்தான்
(இ) அக்பர் (ஈ) ஔரங்கசீப்

பகுதி-II

பிரிவு–1

குறிப்பு: **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28–க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். $10 \times 2 = 20$

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை ?
16. முசோலினியின் ரோமாபுரி நோக்கிய அணிவகுப்பின் விளைவுகள் யாவை ?
17. திருச்சிராப்பள்ளி பேரறிக்கையின் (1801) முக்கியக் கூறுகளைத் தருக.
18. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களைத் தொகுத்து வழங்கவும்.
19. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
20. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
21. "ஜெட் காற்றோட்டங்கள்" என்றால் என்ன ?
22. இந்தியாவின் தோட்டப் பயிர்களைக் குறிப்பிடுக.
23. பேரிடர் அபாய நேர்வு குறைப்பு – வரையறுக்கவும்.
24. கோயம்புத்தூர் ஏன் தென்னிந்தியாவின் "மான்செஸ்டர்" என அழைக்கப்படுகிறது ?
25. உயர் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்கள் பற்றி நீவிர் புரிந்து கொண்டதென்ன ?
26. சார்க் (SAARC) உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
27. பசுமைப் புரட்சியின் விளைவுகள் என்ன ?
28. சிப்காட் (SIPCOT) – சிறு குறிப்பு வரைக.

பகுதி-III

குறிப்பு: **எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **42–க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். $10 \times 5 = 50$

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
(i) படை நீக்கம் செய்யப்பட்ட ______ பகுதியை ஹிட்லர் தாக்கினார்.
(ii) இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினர் ______ ஆவார்.
(iii) கிழக்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் உள்ள உயரமான சிகரம் ______ ஆகும்.
(iv) அரசியல் நிர்ணய சபையின் தற்காலிகத் தலைவராக ______ தேர்ந்தெடுக்கப்பட்டார்.
(v) திருப்பூர்______ தொழிலுக்குப் பெயர்பெற்றது.
30. முதல் உலகப்போருக்கான முக்கியக் காரணங்களை விவாதிக்கவும்.
31. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு மற்றும் செயல்பாடுகளை ஆய்வு செய்க.
32. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது என்பதை விவாதிக்கவும்.

**33.** (அ) வேறுபடுத்துக.
(i) மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகள்
(ii) ராபி பருவம் மற்றும் காரிப் பருவம்
(ஆ) காரணம் கூறுக.
கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடர்ச்சியற்று காணப்படுகின்றன.

**34.** கங்கை ஆற்று வடிநிலம் குறித்து விரிவாக எழுதுக.

**35.** இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.

**36.** தமிழ்நாட்டின் கனிம பரவலை விளக்குக.

**37.** அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.

**38.** நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை திறனாய்வு செய்க.

**39.** GDP கணக்கிடும் முறைகள் யாவை ? அவற்றை விளக்கவும்.

**40.** GST–யின் அமைப்பை எழுதுக.

**41.** கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகட்குட்பட்ட முக்கிய வரலாற்று நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

**42.** உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
(i) மொராக்கோ (ii) ஜெர்மனி (iii) ரஷ்யா (iv) ஹிரோஷிமா (v) சான் பிரான்சிஸ்கோ

## பகுதி-IV

குறிப்பு: பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். $2 \times 8 = 16$

**43.** (அ) காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராய்க.

அல்லது

(ஆ) தமிழ் மறுமலர்ச்சியின் தோற்றம், வளர்ச்சி குறித்து ஒரு கட்டுரை எழுதவும்.

**44.** (அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.
(i) கிழக்கு தொடர்ச்சி மலை (ii) மாளவ பீடபூமி
(iii) கோதாவரி ஆறு (iv) மலைக்காடுகள்
(v) அகஸ்திய மலை உயிர்க்கோளப் பெட்டகம்
(vi) அந்தமான் நிக்கோபர் தீவுகள்
(vii) தேயிலை விளையும் பகுதி (ஏதேனும் ஒன்று)
(viii) எவரெஸ்ட் சிகரம்

அல்லது

(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.
(i) பாக் நீர்சந்தி (ii) வைகை ஆறு
(iii) சென்னை (iv) முதுமலை வனவிலங்கு சரணாலயம்
(v) நெல் விளையும் பகுதி (ஏதேனும் ஒன்று)
(vi) மணிமுத்தாறு அணை
(vii) கன்னியாகுமரி (viii) காகித தொழிலகங்கள் (ஏதேனும் ஒன்று)

-oOo-